KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 192 குரோதி வருடம், பங்குனி மாதம் 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(18.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 17, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823



இந்திய வரைபடத்தில் இலங்கையும் ஏன் இருக்கிறது தெரியுமா...?

பக்கம் 03



கழிவு முகாமைத்துவத்தின் முன்மாதிரியாக விளங்கும் வட்டகொட

பக்கம் 04

மறக்கப்பட்ட தமிழர்கள்



பக்கம் 04



9 மாதங்களுக்குப் பின் பூமி திரும்பும் சுனிதா

பக்கம் 12

## முஸ்லிம் அரசியல் பெயரில் ஹராம்!

### பிமல் சபையில் குற்றச்சாட்டு

‘‘தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனவாதத்துடன் நடந்துகொள்வதில்லை. எந்த சட்டத்தை திருத்துவதாக இருந்தாலும் முறையாக...

» 02 பக்கம்



## -தேசபந்து எங்கிருந்தாலும் கைதுசெய்க-

# ரிட் மனுவை நிராகரித்து நீதிமன்றம் அதிரடி!



### தென்னக்கோன் ஒளிந்திருக்க உதவுவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிப்பு

» 02பக்கம்

## 18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறார்

### இனவாத நோக்கம் இல்லை என்கிறார் அமைச்சர் சரோஜா

‘‘சிறுவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாப்பதற்காக முன்னிற்கும் எனக்கு எதிராக சமூக வலைத்தளங்கள், ரிக் ரொக்கில் சேறு பூசப்படுகின்றது. மோசமாக விமர்சிக்கப்படுகின்றது. 18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள். அவர்களுக்கு கட்டாயம் 13 வருட கல்வி வழங்கப்பட வேண்டும்...

» 02 பக்கம்

## பட்டலந்த விவகாரத்தில் அரசாங்கம் தோற்றுவிட்டது



### சாமர சம்பத் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றும் முயற்சியில் தோல்வியடைந்ததை போன்று பட்டலந்த விவகாரத்திலும் ஒன்றும் செய்ய முடியாது அரசாங்கம் தோல்வியடையும் என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

» 02 பக்கம்





## சூத்திரதாரியை தேடிக்கொண்டிருந்தால் உண்மை மாயமாகிவிடும்



### ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியை அறிந்துகொள்ளுமாறு திலித் எம்.பி. வலியுறுத்து

» 02பக்கம்

## தையிட்டியில் சட்டவிரோதம்

### சானக சம்பத் எம்.பி. சாடல்

‘‘யாழ்ப்பாணம், தையிட்டி திஸ்ஸ விகாரையை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் உரிமம் கோருவதற்காக போலியான ஆவணங்களை வைத்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். எனவே சட்டவிரோதமாக...

» 02 பக்கம்



வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கக் கோரி, பொல்துவ சந்தியில் ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகளின் சங்கத்தினால் நேற்று (17) எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு – வெனுர சந்ரமாலித)





தேசபந்து தென்னக்கோன் நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக வெளிநாடு செல்லலாம் என்ற அச்சத்தில் கடல் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்.

எவ்வாறாயினும் நீதிமன்றம் கையை விரித்திருப்பதால் சட்டத்தரணிகளூடாக நீதிமன்றத்தில் சரணடைய தேசபந்து தீர்மானித்துள்ளதாக தகவல். தேசபந்து விடயத்தில் நீதித்துறையும் கடுப்பில் இருப்பதால் இனியும் தலைமறைவாகாமல் இருப்பதே நல்லதென தீர்மானித்துள்ளாராம் தென்னக்கோன்.



## ஜே.வி.பியின் படுகொலைகளை திசைகாட்டி அரசே ஒப்புக்கொண்டது

### சாடுகிறார் உதய கம்மன்பில

“பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தற்போதைய...

» 02 பக்கம்

## தகுதியின் அடிப்படையிலேயே ஹஜ் குழுவினர் நியமிக்கப்பட்டனர்

» 02 பக்கம் கூறுகிறார் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர்

## சாட்சிகள் நிரூபணமானால் ரணில் கைதுசெய்யப்படுவார்



### பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெறுமென்கிறார் ரில்வின் சில்வா

பட்டலந்த வதைமுகாம் விவகாரத்தில் ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு மேலதிகமாக...

» 02 பக்கம்

## தகுதியின்...

பள்ளிவாசல் மற்றும் வக்பு சபைகளுக்கு அரசியல் தலையீட்டுடனான நியமனங்கள் வழங்கப்படுவதாக எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் கடந்த அரசாங்கமே ஹஜ் குழுவுக்கு அமைச்சருக்கு நெருக்கமானவர்களை நியமித்திருந்தது. ஆனால் ஹஜ் குழுவினர் எங்களுக்கு எந்தவகையிலும் ஆதரவளிக்காத தகுதியானவர்களையே இம்முறை நியமித்திருக்கிறோம்'' என தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

'' எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் விமர்சித்து குற்றச்சாட்டுகளை தெரிவித்து வந்தார். அவரின் குற்றச்சாட்டுகளுக்கு அரசில் இருக்கும் நாங்கள் ஏன் பதிலளிக்காமல் இருக்கின்றோம் என பலரும் சமூகவலைதளங்களில் எமது படங்களை பிரசுரித்து கேள்வி கேட்டு வருகின்றனர். ஆனால் அல்குர்ஆன் அறிவில்லாத, முட்டாள்கள் உங்களுடன் தர்க்கம் செய்யும்போது அவர்களுக்கு அமைதி உண்டாகட்டும் என கூறுங்கள் என்கின்றது.

அதேவேளை, நாங்கள் பள்ளிவாசல் மற்றும் வக்பு சபைகளில் அரசியல் தலையீடு மேற்கொண்டு நியமனங்கள் வழங்குவதாக எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் குற்றம் சாட்டினார் . ஆனால் கடந்த அரசாங்கமே ஹஜ் குழுவுக்கு அமைச்சருக்கு நெருக்கமானவர்களை நியமித்திருந்தது. ஆனால் இந்த முறை நாங்கள் நியமித்திருக்கும் ஹஜ் குழுவினர் எங்களுக்கு எந்தவகையிலும் ஆதரவளிக்காதவர்கள். அவர்கள் தகுதியானவர்கள் என்பதன் பிரகாரமே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்'' என்றார்.

## தையிட்டியில்...

குடியேறியுள்ளவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்'' என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சானக சம்பத் மதுகொட வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(17) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

''யாழ்ப்பாணத்திலுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு இதுவரையில் உறுதியான தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த விகாரை 1956 ஆம் ஆண்டு நகர திட்ட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விகாரையை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் உரிமை கோருவதற்காக போலியான ஆவணங்களை வைத்துக்கொண்டு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். எனவே தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விசேட குழுவை நியமிக்க வேண்டும். இந்த விகாரையை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையிலும் இதே பிரச்சினை. நீதிமன்ற உத்தரவினால் ஆராய்ச்சி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் பௌத்த மத தொல்பொருள் சின்னங்கள் அழிவடைவதற்கு காரணியாக அமையும். குருந்தூர் மலையில் நில அளவையியல் திணைக்களம் சட்ட ரீதியில் காணி எல்லைகளை அடையாளப்படுத்தியுள்ள நிலையில் ஒரு தரப்பினர் தொடர்ந்து முரண்பாடுகளை ஏற்படுத்துகிறார்கள்.

வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் பௌத்த விகாரை மற்றும் தொல்பொருள் சின்னங்களை பிரச்சினைக்குரியதாக்கி அதனூடாக அரசியல் செய்கிறார்கள். வடக்கு மாகாணத்தில் 600 இடங்கள் தொல்பொருள் மையங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடங்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து, தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க வேண்டும். அரசியல்வாதிகள் தொடர்பில் சமூக கட்டமைப்பில் வெறுப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில் தான் அரசியல் செய்கிறோம். மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். மதஸ்தலங்கள் மற்றும் பிரிவெனா உட்பட மத பாடசாலைகள் அபிவிருத்திக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. மத நல்லிணக்கம் தொடர்பில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான திட்டங்களை குறிப்பிடவில்லை. மதஸ்தலங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு'' என்றார்.

## முஸ்லிம் அரசியல்...

கலந்துரையாடியே அதனை செய்வோம்'' என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் அனைவரும் ஒன்றாக வாழ முடியும் என்பதனை பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரையில் மக்கள் ஆணையை வழங்கி உறுதிப்படுத்தியுள்ளனர். இதனால் இந்த மக்கள் ஆணையை புரிந்துகொண்டு நடந்துகொள்ள வேண்டியது எமது கடமையாகும். எமது மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தொடர்பில் முறையற்ற வகையில் அரசியல் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இதனை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் மதத் தலைவர்களிடம் கேட்கின்றோம்.

நாங்கள் அரசியலுக்காக எவ்வித இனவாதம், மதவாதத்தை கையில் எடுப்பவர்கள் அல்ல. இப்போது பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பாலான முஸ்லிம் எம்.பிக்கள் முஸ்லிம் மக்கள் மீது அதிகளவில் தாக்குதல்களை நடத்திய சகல அரசாங்கங்களிலும் அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளனர். ஆனால் நாங்கள் ஒருபோதும் வாக்குகளை எதிர்பார்த்து மதவாதத்தில் ஈடுபட்டதில்லை. எமது கட்சியில் உள்ள மிகவும் பெறுமதியான ஒருவரே சரோஜா போல்ராஜ், அவர் கறுப்பு ஜூலையில் பாதிக்கப்பட்டவர்கள். அவர் சகல இன மக்களுடனும் இணைந்து பணியாற்றி இன்று சிறந்த தலைவியாகியுள்ளார்.

எமது ஜனாதிபதி பதவிக்கு வர முன்னர் ஜம்மியத்து உலமாவை சந்தித்து முஸ்லிம்கள் தொடர்பான தனிப்பட்ட சட்டங்கள் உள்ளன. இதன்படி இஸ்லாமிய சட்டங்களை மாற்றுவதென்றால் அது தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடியே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை உறுதியளித்துள்ளார். ஆனால் அதனை தெரிந்துகொண்டே இப்போது எமது அமைச்சர் மீது விமர்சனங்களை முன்வைக்கின்றீர்கள். தேசிய மக்கள் சக்தியை இந்த நாட்டின் முஸ்லிம் மக்களும் பெரிய கட்சியாக்கியது ஏன்? முஸ்லிம் அரசியல் என்று செய்பவர்கள் பலரின் அரசியல் ஹராம், அந்த அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை ஹராம், அவர்களின் வியாபாரங்கள் ஹராம், அவர்கள் மதத்தின் பெயரால் செய்வது ஹராமே. இப்போது உள்ளூராட்சி தேர்தலின்போது சரோஜா போல்ராஜ் தொடர்பில் கூறுகின்றனர். அவர் அவ்வாறு சுவிட்ஸர்லாந்தில் எந்த கருத்தையும் கூறவில்லை. மாற்றங்கள் செய்ய வேண்டுமாயின் மாற்றத்தை செய்ய வேண்டும். இஸ்லாமிய கலாசாரங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் கட்சியென்ற வகையில் இனவாதத்தை செய்வதில்லை. கலாசாரங்களை மதிக்கின்றோம். நீங்கள் விமர்சனங்கள் முன்வைப்பதை நிறுத்துங்கள். நாங்கள் எந்த சட்டத்தை திருத்தவதாக இருந்தாலும் முறையாக கலந்துரையாடியே செய்வோம். நீங்கள் கடந்த தேர்தலில் இவர்களில் பலரை நிராகரித்தீர்கள். எஞ்சியவர்களையும் நிராகரித்து கற்ற இஸ்லாமிய இளைஞர்கள், யுவதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள்'' என்றார்.

## பட்டலந்த...

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(17) நடைபெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''நாட்டின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வேலைத்திட்டத்துடன் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை ஆரம்பித்த போதும், இப்போது அந்த திட்டம் இடம்பெறுவதை போன்று தெரியவில்லை. முதலில் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புங்கள். அதன்பின்னர் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்கலாம்.

இதேவேளை, இப்போது பட்டலந்தவை பிடித்துக்கொண்டிருப்பதில் பலனில்லை. மூன்று மாதங்களாக மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டை பிடித்துக்கொண்டிருந்தனர். ஆனால் இன்னும் அவர் அந்த வீட்டில்தான் இருக்கின்றார். அவரை உங்களால் இதுவரையில் வெளியில் போட முடியவில்லை. நீதிமன்றத்துக்கு போவதாகவும் நீங்கள் கூறினீர்கள். ஆனால் அங்கேயும் நீங்கள் போகவில்லை. அந்த விடயத்துக்கு பதிலாக புதிய விடயமாக இப்போது பட்டலந்தவை பிடித்துள்ளீர்கள். இதுவும் இரண்டு மாதங்களுக்கு இழுத்துக்கொண்டு போகும்'' என்றார்.

## சாட்சிகள்...

இன்னும் பலர் சாட்சியளிப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அந்த சாட்சிகள் முன்னிலையாகுமாக இருந்தால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல, சம்பந்தப்பட்ட அநேகமானவர்களுக்கு தண்டனை வழங்க நேரிடும்'' என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கமே நியமித்தது. நாங்கள் இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கவில்லை. அவர்களால் முடிமறைத்து வைக்கப்பட்டிருந்த அறிக்கையையே நாங்கள் தற்போது சபையில் சமர்ப்பித்துள்ளோம். இந்த அறிக்கையை வைத்து சேறுபூசுவதற்கான அவசியம் எங்களுக்கு இல்லை.

ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் அதனை யார் வேண்டுமென்றாலும் பரிசீலனை செய்ய முடியும். அதேபோன்று பாராளுமன்றத்தில் இதுதொடர்பில் விவாதம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி அண்மையில் கருத்துத் தெரிவிக்கையில், அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை அவர் நிராகரிக்கவும் இல்லை.

இதற்கு மேலதிகமாக பட்டலந்தவில் இடம்பெற்ற நடவடிக்கைகள் தொடர்பில் சாட்சியளிப்பதற்கு பல்வேறு தரப்பினரும் தயாராக இருக்கிறார்கள். அங்கிருந்து சித்திரவதைகளை அனுபவித்தவர்கள், பொலிஸ் அதிகாரிகள் என்று பல்வேறு தரப்பினர் சாட்சியளிப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். எனவே இதுதொடர்பில் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். எந்த காரணத்துக்காகவும் இந்தத் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளாது.

இந்த விவகாரத்தில் இருவேறு விமர்சனங்கள் இருக்கின்றன. சேறு பூசுவதற்காகவும் பழிவாங்குவதற்காகவுமே இது முன்வைக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்படுபவர்கள் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இந்த அறிக்கையை முன்வைத்தமைக்காக ரணிலுக்கு தண்டனை வழங்கப்படாது என்று கூறுகிறார்கள். எனவே, யார் என்ன கூறினாலும் சட்டத்தின் அடிப்படையில் செயற்படுவோம். சேறுபூசவும் போவதில்லை. பழிவாங்கவும்போவதில்லை.

ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு மேலதிகமாக இன்னும் பலர் தயாராக இருக்கிறார்கள். அதனால் அந்த சாட்சிகள் முன்வைக்கப்படுமாக இருந்தால் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல சம்பந்தப்பட்ட அநேகமானவர்களுக்கு தண்டனை வழங்க நேரிடும்.

ஜே.ஆர். ஜெயவர்தன, பிரேமதாசவின் காலப்பகுதியில் ஒருசில அமைச்சர்களினால் உத்தியோகபூர்வமற்ற வதைமுகாம்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதிலொன்றாகவே இந்த பட்டலந்த வதைமுகாம் இருந்தது. ஏனைய வதைமுகாம்கள் தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. அது சற்று கடினமான விடயம் என்றாலும் வரலாற்றில் வடக்கு தெற்கு என்ற வேறுபாடின்றி இடம்பெற்ற குற்றச்செயல்கள், கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கும் அதேநேரத்தில் எமது நாட்டில் நியாயமின்றி உயிரிழந்தவர்கள், கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

வதைமுகாம்களில் மாத்திரமல்ல அதன் பின்னர் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. எனவே கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜனநாயகத்துக்கு முரணான விடயங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறோம்.

மக்களின் ஆணைக்கமைய, சமூக மாற்றத்தை மேற்கொள்வதற்கான பொறுப்பு எங்களுக்கு இருப்பதை போன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல கொலைச் சம்பவங்கள், ஜனநாயக விரோத செயற்பாடுகள், சித்திரவதைகள் தொடர்பில் விசாரணை நடத்தவேண்டிய கூட்டுப்பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது'' என்றார்.

## 18 வயதுக்குட்பட்ட...

அதனையே நான் வலியுறுத்துகின்றேன். எனவே இதனை இன, மத, அடிப்படைவாதத்தில் பார்க்க வேண்டாம்'' என சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை(17) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள். அவர்களுக்கு கட்டாயம் 13 வருட கல்வி வழங்கப்பட வேண்டும். அதனையே நான் வலியுறுத்துகின்றேன். எனவே இதனை இன, மத, அடிப்படைவாதத்தில் பார்க்க வேண்டாம். பேச வேண்டாம். அடிப்படைவாதத்துக்கு கொண்டு செல்ல வேண்டாம். சிறுவர், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். அவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும். அதற்காக நான் செயற்படும் போது எனக்கு எதிராக சமூக வலைதளங்கள், ரிக் ரொக்கில் சேறு பூசப்படுகின்றது. என்னை மோசமாக விமர்சிக்கின்றார்கள். நாம் இன, மத ரீதியாக செயற்படுபவர்கள் இல்லை. ஆனால் ஐ.நா. சிறுவர் சமவாயத்தின் அடிப்படையில் 18 வயதுக்கு குறைந்த அனைவரும் சிறுவர்கள் என்ற அடிப்படையில்தான் நாம் செயற்படுகின்றோம்.

ஜம்இய்யத்துல் உலமாவுடன் இருதடவைகள் பேசியுள்ளோம். சகல சிறுவர்களுக்கும் கல்வி பெற்றுக்கொள்வது அவர்களின் அடிப்படை உரிமை. அவர்களுக்கு நாம் முன்னிற்போம். நான் நீதி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் அல்ல. சிறுவர் மகளிர் விவகார அமைச்சர். அந்தவகையில் சிறுவர், மகளிர் உரிமை பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். நான் இந்த விடயங்களை 01, 02 வருடங்களாக பேசவில்லை. என்னுடைய அரசியல் பயணம் 26 வருடங்களைக்கொண்டது. அதனால் நீண்டகாலமாக பெண்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றேன். அது ரிஸானா நபீஸாக இருக்கலாம். ஹிஷாலினியாக இருக்கலாம். இவர்களைப்பற்றி நாங்கள் பேசியுள்ளோம். எங்களுக்கு ஏதாவது சட்டங்களை மாற்ற வேண்டிய தேவை இருந்தால் அதனைப்பற்றி நாம் கலந்துரையாட வேண்டிய தன்மையுள்ளது. ஒரு சட்டத்தை அமுல்படுத்த பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்படும்போது அதனை தனிப்பட்ட ரீதியாகவோ பலவந்தமாகவோ செய்ய முடியாது என்றார். இதன்போது எழுந்த எதிர்க்கட்சி எம்.பி. உதுமாலெப்பை, ''குழந்தை திருமணத்தை மாற்ற அரசு ஆலோசனை. குழந்தை திருமணம் அனுமதிக்கப்பட்ட முஸ்லிம் விவாக சட்டத்தை மாற்ற அரசு ஆலோசனை. அமைச்சர் சரோஜா போல்ராஜ் ஐ.நாவுக்கு தெரிவிப்பு என்றுள்ளது. இந்த விடயத்தை நாம் ஐ.நாவுக்கு சொல்லத்தேவையில்லை. இலங்கையில் உள்ள ஜம்இய்யத்துல் உலமா சபையிடம் சொல்லலாம். சிங்கள, தமிழ், மலையகத்தில் கூடுதலாக குழந்தை திருமணங்கள் நடந்துள்ள நிலையில் ஏன் முஸ்லிம் சமூகத்தை மட்டும் குறிப்பிட்டு சொல்கின்றீர்கள்'' எனக்கேட்டார்.

இதற்கு அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் பதிலளிக்கையில், ''ஐ.நா. சபையில் நாம் விரும்பியதை பேச முடியாது. அவர்கள் எதனைக் கேட்கின்றார்களோ அதற்கு பதிலளிக்கத்தான் ஐ.நா. சபை கூட்டப்படுகின்றது. அங்கு நடந்த சீடோ மாநாட்டின்போது அதற்கு முன்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருந்தது. இது இங்குள்ள ஆங்கிலப்பத்திரிகை ஒன்றில் தவறான முறையில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஐ.நா. சபையில் அவ்வாறான ஒரு பேச்சை நான் பேசவில்லை. பலதரப்பட்ட குழுவின் ஆலோசனைகளைப் பெற்று இதனைத் தீர்ப்போம் என்றுதான் நான் கூறினேன். சட்ட மாற்றங்களுக்கு முன்வருவோம் என்ற வார்த்தையை நான் கூறவில்லை. எனவே அந்த பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கூறுகின்றேன்'' என்றார்.

## தேசபந்து...

2023ஆம் ஆண்டு மாத்தறை வெலிகமவில் உள்ள 'W15' ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமுல்படுத்துவதைத் தடுக்க இடைக்காலத் தடை விதிக்கக்கோரி, பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தாக்கல் செய்த ரிட் மனுவை, மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (17) தள்ளுபடி செய்தது.

அதேசமயம் தேசபந்து தென்னக்கோனை தாமதமின்றி கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், மனுதாரர் நீதிமன்ற ஆணையை மதிக்காமல் தப்பிச் செல்ல உதவிய நபர்கள் மீது விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது. தேசபந்து தென்னக்கோன் தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதியரசர் முகமது லாபர் தாஹிர் மற்றும் நீதியரசர் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வால் கடந்த 12ஆம் திகதி விசாரிக்கப்பட்டது. முன்கூட்டியே பரிசீலிக்கப்பட்டது.

நேற்று காலை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் தீர்ப்பை அறிவிக்கவிருந்தபோது எழுந்து நின்ற தேசபந்து தென்னக்கோன் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, " இந்த வழக்கு தொடர்பான மாத்தறை நீதவான் நீதிமன்றத்தின் முழுமையான வழக்கு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மாத்தறை நீதிமன்றத்திலிருந்து முழுமையான வழக்கு கோப்பின் நகலைப் பெற விண்ணப்பித்தோம். கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் முழுமையான வழக்கு கோப்பின் நகலைப் பெற்றோம். அதன்படி, இன்று காலை இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, அந்த முழுமையான ஆவணம் தொடர்பான விடயங்களை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

சட்ட மா அதிபர் சார்பாக ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், அந்தக் கோரிக்கையை கடுமையாக எதிர்த்தார்.

"அந்தக் கோரிக்கையை நான் கடுமையாக எதிர்க்கிறேன். இந்த வழக்கின் மனுதாரர் 28ஆம் திகதி முதல் நீதிமன்ற உத்தரவுகளைத் தவிர்த்து தலைமறைவாக உள்ளவர். இந்த மனு காலை சுமார் 8.40 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டது. தீர்ப்பை ஒத்திவைக்கும் நோக்கில் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மறைமுக நோக்கங்களுடன் சமர்ப்பிக்கப்படும் இதுபோன்ற கோரிக்கைகளை அனுமதிக்க வேண்டாம் என்று நீதிமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்றார் திலீப பீரிஸ்.

அதன்படி, மனுதாரரின் மனுவை நிராகரித்து தீர்ப்பை அறிவிக்குமாறு அவர் நீதிமன்றத்தை கோரினார். இதற்கிடையில், நேற்று முன்தினம் பொலிஸ் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கையை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பித்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு சந்தேக நபரும் கைது செய்யப்படமாட்டார் என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் உறுதிமொழி அளித்துள்ளதாகக் கூறினார்.

இந்த பொலிஸ் ஊடக வெளியீட்டின் பிரதியொன்றும் ஜனாதிபதி சட்டத்தரணியால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் லாபர், அறிவிப்பின் நான்காவது பத்தியில் கூறப்பட்டுள்ளபடி நீதிமன்றம் அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்கவில்லை என்று கூறினார். இது தொடர்பான சமர்ப்பணத்தை விளக்கிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், " ஜனவரி மாதத்தில், இந்த சம்பவத்தில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று தங்களை கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்தது. இது பரிசீலனைக்கு அழைக்கப்பட்டபோது, விசாரணை முடியும் வரை தங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஒரு உடன்பாட்டை எட்டினர். அப்போது, மாத்தறை மஜிஸ்ரேட் நீதிமன்றம் அவர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் இப்போது நிலைமை வேறுபட்டது. இப்போது நீதிமன்றம் சந்தேக நபர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நேரத்தில், நீதிமன்ற உத்தரவுப்படி நாம் செயற்பட வேண்டும். எனவே, அந்த ஒப்பந்தம் இனி நடைமுறையில் இல்லை. சட்ட மா அதிபர் அதை வாபஸ் பெற்றுள்ளார். நேற்று நடந்தது ஒரு முழுமையான ஊடக நாடகம் . இன்று அறிவிக்கப்படவுள்ள தீர்ப்பில் செல்வாக்கு செலுத்தும் நோக்கில் இந்த தகவல்கள் நேற்று ஊடகங்களில் வெளியிடப்பட்டன. இன்று அறிவிக்கப்படவுள்ள தீர்ப்பின் மீது அழுத்தம் கொடுக்க இது நடந்தது," என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் இங்கு குறிப்பிடுகையில், ''இந்த மனு தொடர்பாக இரு தரப்பு வழக்கறிஞர்களிடமும் நீதிமன்றம் 12ஆம் திகதி விரிவாக விசாரித்ததாகக் கூறினார். பின்னர் மனுதாரர் தாக்கல் செய்த மனுவை நிராகரித்து தீர்ப்பை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர், இங்கு மனுதாரர் ஒரு சாதாரண குடிமகன் அல்ல, மாறாக நாட்டின் பொலிஸ்துறைத் தலைவர் என்பதை நினைவு கூர்ந்தார்.

"இந்த வழக்கில் மனுதாரர் ஒரு சாதாரண குடிமகன் அல்ல. அவர் நாட்டின் பொலிஸ்துறைத் தலைவர். நாட்டில் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் இறுதிப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய பொறுப்பான நபர் நீதிமன்ற உத்தரவுகளைத் தவிர்க்கும் வகையில் செயல்பட முடியாது. பொலிஸும் நீதித்துறையும் சுயாதீனமாகச் செயற்படும் இரண்டு நிறுவனங்கள். எனவே, மனுதாரர் பொதுமக்களின் நம்பிக்கையை மீறும் வகையில் செயற்பட முடியாது. இது சட்ட அமுலாக்க நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைப்பதற்கும் வழிவகுக்கும்" என்று நீதியரசர் தனது தீர்ப்பில் கூறினார்.

"மனுதாரர் பொலிஸ் மா அதிபர் என்ற முறையில் இந்த மனுவை முன்வைத்துள்ளார். சட்டத்தை மதிக்கும் நபராக, அவர் முதலில் செய்திருக்க வேண்டியது மாத்தறை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜராகி அந்த உத்தரவை நிறைவேற்றுவதாகும். மஜிஸ்ரேட்டின் உத்தரவில் ஏதேனும் குறைபாடு இருந்தால், அவர் புகார் அளித்திருக்கலாம்" என்றார்.

மேலும் தனது முடிவை அறிவித்த நீதியரசர் ,

"மனுதாரர் பொலிஸ் மா அதிபர் என்ற முறையில் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறார். சட்டத்தை மதிக்கும் நபராக, அவர் முதலில் செய்திருக்க வேண்டியது மாத்தறை நீதிமன்றத்தின் முன் ஆஜராகி உத்தரவுக்குக் கீழ்ப்படிவதுதான். நீதிமன்ற உத்தரவில் ஏதேனும் குறைபாடு இருந்தால், அதன் பின்னரே அவர் புகார் அளித்திருக்க வேண்டும். இருப்பினும், மனுதாரர் அந்த சட்ட மரபைப் பின்பற்றவில்லை. அவர் சட்டத்துக்கு மேலானவர் போல் செயற்பட்டதாக நீதிமன்றம் கருதுகிறது. சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட நபராக, நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஒரு சாதாரண குடிமகனுக்கு எதிராக ஒரு சிறிய குற்றம் நடந்தாலும், பொலிஸ் மா அதிபர் அவரைக் கைது செய்து சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கிறார். இருப்பினும், சட்டத்தின் ஆட்சியை அமுல்படுத்தும் ஒரு நிறுவனத்தின் தலைவராக அத்தகைய உத்தரவை புறக்கணிக்க முடியாது. அவர் அவ்வாறு செய்தால், சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைமதிப்புக்கு உட்படுத்தப்படும், மேலும் 'அரகலய' போன்ற சூழ்நிலைகள் ஏற்படக்கூடும்" என்றார்.

அதன்படி, மனுதாரர் இந்த நடவடிக்கைக்கு கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளை தவறாகப் பயன்படுத்தியது, இந்த நடவடிக்கை குறித்து எந்த குறிப்புகளையும் எடுக்கத் தவறியமை, தென் மாகாணத்தில் ஒரு நடவடிக்கைக்காக கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் புறப்பட்டமை குறித்து அந்தப் பகுதியின் OICக்கு தெரிவிக்கத் தவறியது, T-56 வகை துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களை சட்டவிரோதமாக கையகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல், மனுதாரரின் கீழ் ஒரு 'துணை இராணுவ குழு' இருப்பது, இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் சார்ஜன்டை அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்காமல் இமதுவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு தொடர்ந்து கொண்டு சென்றமை, இந்த நடவடிக்கையில் பங்கேற்ற அனைத்து அதிகாரிகளின் அதிகாரபூர்வ மொபைல் போன்களையும் நிறுத்தி வைத்தமை, மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த கைது உத்தரவை நிறைவேற்றத் தவறியமை போன்ற சந்தேகத்துக்குரிய விடயங்களை கருத்தில்கொண்டு இந்த தீர்ப்பு அறிவிக்கப்படுவதாக நீதியரசர் கூறினார்.

மேலும் விளக்கிய நீதியரசர், மனுதாரர் நீதிமன்றத்திடம் உண்மைகளை மறைத்து இந்த ரிட் கோரிக்கையை முன்வைத்ததாகக் கூறினார். "அனைத்து உண்மைகளையும் பகுப்பாய்வு செய்யும் போது, மனுதாரரை கைது செய்ய மாத்தறை மஜிஸ்ரேட் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை சட்டபூர்வமானது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 136(1)1 இன் கீழ் அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்க மஜிஸ்ரேட்டுக்கு அதிகாரம் இல்லை என்று மனுதாரர் கூறியிருந்தார். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்க நீதவான் நீதிமன்றுக்கு அதிகாரம் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அனைத்து விடயங்களையும் பகுப்பாய்வு செய்யும்போது, மனுதாரர் சுத்தமான கைகளுடன் நிவாரணம் கோரி இந்த நீதிமன்றத்துக்கு வரவில்லை என்று தெரிகிறது. எனவே, அவர் கோரிய நிவாரணத்தை வழங்க நீதிமன்றத்தால் முடியாது," என்று கூறிய நீதியரசர், இந்த மனுவை ரூ. 10,525 கட்டணத்துக்குட்பட்டு தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்.

தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், இந்த தீர்ப்பு நாட்டின் நீதித்துறை வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

## ஜே.வி.பியின்...

அமைச்சரவை அனுமதித்துள்ளது என்றால் மக்கள் விடுதலை முன்னணி மனித படுகொலைகளை செய்தது என்பதை திசைகாட்டி அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்கும் குற்றச்செயல்களுக்கும் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும்" என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவினால் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை தீர்மானத்துக்கமையவே இந்த அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுகிறது என்பதே அவரின் நிலைப்பாடாகும்.

இதுதொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதே இந்த அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதாகும். எனவே, அந்த அறிக்கையில் மூன்றாவது பகுதியானது மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள் பற்றி பேசுவதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரம் 1960 வரையிலானவர்கள் ஜே.வி.பியின் பயங்கரவாதிகளினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். அது மாத்திரமல்லாமல் பொலிஸார், இராணுவத்தினர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரை கூட ஜே.வி.பியினர் கொலை செய்ததாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை அமைச்சரவையில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதன் பொருள் மக்கள் விடுதலை முன்னணி இதனை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் அரச பயங்கரவாதமும் தவறு. ஜே.வி.பியின் பயங்கரவாதமும் தவறாகும்.

அறிக்கையை தற்போதைய அமைச்சரவை ஏற்றுக்கொண்டது என்றால், ஜே.வி.பி. பயங்கரவாதம் என்று ஏற்றுக்கொண்டது என்றால் இந்த கொலைச் சம்பவங்களுக்கும் குற்றச்செயல்களுக்கும் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும்'' என்றார்.

## சூத்திரதாரியை...

''அரசியல் நிலைப்பாடுகளுக்கமைய உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கான பிரதான சூத்திரதாரியை தேடிக் கண்டுப்பிடிக்க தொடர்ந்து முயற்சித்துவந்தால் எமது நாட்டில் இருக்கும் சமயங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் இருக்கும் இணைப்பு இல்லாமல் போய் உணர்வுபூர்வமான சமயம் சார்ந்த உண்மையை அறிந்துகொள்ளாமல் குழியில் விழ வேண்டிவரும். அதனால் இந்தச் சம்பவத்தின் பின்னணியை சரியாக புரிந்துகொள்ள வேண்டும்'' என சர்வசன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவலக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''எமது நாட்டில் ஒவ்வொரு தடவையும் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டுள்ள நாகரீகம் என்ற சொற்பதம், அரசியலில் மிகவும் கீழ்த்தனமான பொருளுடன் கையாளப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு எப்போதும் கிடைக்க வேண்டிய எந்தவொரு முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை என்பதே எனது நிலைப்பாடாகும்.

நாட்டின் தேசியத்துவத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் இலங்கை தேசியத்துவம் என்றதன் அடிப்படையிலேயே நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் என்றும் தொடர்ந்தும் நாம் கூறுகிறோம். இலங்கை தேசியத்துவம் என்பது என்ன? இலங்கை தேசியத்துவம் என்பது சிங்களவர்களையும் பௌத்தர்களையும் வெளிப்படுத்துவதா? அவ்வாறு இல்லாவிட்டால் எமது சிறந்த நாகரீகம் தொடர்பான வெளிப்பாடா?

எமது தேசியத்துவத்துக்கு நாகரீக தாக்கத்தை ஏற்படுத்தும் பௌத்த மதம், சமய நிலைப்பாட்டில் கருதினாலும் இந்த உலகில் பிறந்தவர்களுக்கு எதுவும் உரிமையில்லை என்பதையே வலியுறுத்துகிறது. நீங்கள் அடிமையாகவும் இருக்க முடியாது. சிங்களவராக இருக்கவும் முடியாது. தமிழராகவும் இருக்க முடியாது. முஸ்லிமாகவும் இருக்க முடியாது. பிறப்பின் அடிப்படையிலான செயற்பாட்டில் ஏற்படும் மாற்றத்தை மாத்திரமே எமது நாகரீகம் நம்புகிறது.

ஆனால், இந்த விடயத்தை சரியாக புரிந்துகொள்ளாமையின் காரணமாக சமூகத்தில் வெளியிடப்படும் பல்வேறு நிலைப்பாடுகளினால், அதனூடாக நாட்டின் எமது கலாசாரத்துக்கே உரித்தான எமக்கே உரித்தான நல்லிணக்கம் இல்லாமல் போயுள்ளது. இதனை சரிசெய்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் சமய மற்றும் கலாசாரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எமது பிக்குகள் செயற்படுவதாக தமிழ்மொழி பேசும் பிரதிநிதியொருவர் சபையில் கூறியிருந்தார். அப்படியொரு விடயம் இடம்பெற்றிருக்குமாக இருந்தால் அதனை சரிசெய்ய வேண்டும்.

இலங்கையிலுள்ள முஸ்லிம், கத்தோலிக்கர் என சகல மக்களும் இலங்கைக்கே உரித்தானவர்கள். இதுவே எமது நாகரீகத்தின் அடையாளமாகும். ஏனைய சகல சமயங்களும் எனது நாகரீகத்தை மதிக்கின்றன. எனவே எமது நாகரீகம் தொடர்பில் வெளிப்படையாக பேசுவதற்கு வெட்கப்படுவது தீய விடயமாகும். அரசியலின் காரணமாக இதனை தவறாக புரிந்துகொண்டவர்களே திரிபுபடுத்துகிறார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஊடக நேர்காணலொன்றில் அவரின் தேசத்தைப் பற்றி உற்சாகத்துடன் பேசுகிறார். சமய, இன பேதமின்றி நாட்டுக்கே உரித்தான கலாசாரத்தினால் தோற்றம் பெறுபவர்களே கலாசாரத்தை பின்பற்றும் நபர்கள். மாக்ஸிச வாதம் தோல்வியடைந்துவிட்டது. கலாசாரத்தின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளதை நாங்கள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறோம். தவறை சரி செய்துகொண்டு முன்னோக்கிச் செல்வதே அவசியமாகும். அரசாங்கத்தின் புதிய மாற்றங்களை நாங்கள் வரவேற்கிறோம்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இடைக்கிடை நினைவுப்படுத்தி வருகிறார். அதற்கான நீதியையும் கோருகிறார். இந்த தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியின் பின்னால் செல்வதற்கு பதிலாக, பின்னணியை புரிந்துகொள்ள வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி தொடர்பில் முஸ்லிம் மக்களுக்கு சரியான புரிதல் இருக்கிறது. அதனை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் பிரதான சூத்திரதாரியை தேடிக் கண்டுப்பிடிக்கச் சென்றால் எமது நாட்டில் இருக்கும் சமயம் மற்றும் இனத்துக்கிடையில் இருக்கும் இணைப்பு இல்லாமல் போய் சமய உணர்வுபூர்வமான உண்மையை அறிந்துகொள்ளாமல் குழியில் விழ வேண்டிவரும்'' என்றார்.



# விதியை வெல்ல முடியுமா?

நாரதர் தனது பக்தருக்கு உதவுமாறு இந்திரனிடம் வேண்டினார்.

இந்திரனும் “ஒரு பசுமாட்டையும் கன்றுக்குட்டியையும் வைத்துதான் அவன் பிழைப்பு நடத்தியாக வேண்டும். உமக்காகக் கூட உமது பக்தனுக்கு அவனுடைய விதியை மீறி எதனையும் செய்துகொடுக்க முடியாது” என்று கூறிவிட்டார்.

இந்திரனை அதற்கு மேலும் வற்புறுத்தாமல் நாரதரும் அமைதியாகிவிட்டார்.

அவர் தனது பக்தனிடம் வந்து, “உனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும்?” என்று கேட்டார்.

“நாளொன்றுக்கு ஐநூறு ரூபா கிடைக்கும். அதில் மாட்டைப் பராமரிப்பதில் முந்நூறு ரூபா செலவாகிவிடும். மீதமுள்ள இருநூறு ரூபாயைக் கொண்டுதான் வீட்டுச் செலவுகள் அத்தனையையும் பார்க்கவேண்டும்” என்று அந்த பக்தர் கூறினார்.

நாரதர் கேட்டார்: “இந்த மாட்டை விற்றால் எவ்வளவு கிடைக்கும்?”

“மிகச் சுலபமாக பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.”

“ஐநூறு பெரிதா, பத்தாயிரம் பெரிதா? மாட்டை ஓட்டிக்கொண்டு வா! பத்தாயிரத்துக்கு விற்று விடலாம்!” எனக் கூறியவாறே நாரதர் புறப்பட்டார்.

வேறு வழி தெரியாத பக்தரும் மாட்டை ஓட்டிச் சென்றார்.

மாட்டை விற்றதில் பத்தாயிரம் ரூபா கிடைத்தது.

“ஐநூறு ரூபா கிடைத்தால் சிக்கனமாகத் தான் செலவழித்தாக வேண்டும். இப்போது உனக்கு பத்தாயிரம் ரூபா கிடைத்துள்ளது. உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் கூப்பிடு. எல்லோருக்கும் தாராளமாக விருந்து வைக்கலாம்” என்று நாரதர் கூறினார்.

தடபுடலாக விருந்து நடைபெற்றது. ரூபா பத்தாயிரமும் காலி.

நாளைய செலவை எப்படி எதிர்கொள்வது என்ற கவலையில் அந்தப் பக்தருக்கு இரவுத் தூக்கம் வரவில்லை.

அதிகாலையில் எழுந்து பார்த்தால், மாட்டுத் தொழுவத்தில் புதியதாக ஒரு மாடும் கன்றுக்குட்டியும் நின்றுகொண்டிருந்தன.

பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஏன் யோசித்துக்கொண்டிருக்கிறாய் ? இன்றைய செலவுக்கு இவை போதும். மாட்டையும் கன்றுக்குட்டியையும் என் பின்னால் ஓட்டிக்கொண்டு வா” என்று நாரதர் கூறவும் இருவரும் அந்த மாட்டை விற்று பணத்தைக் கொண்டுவந்தார்கள்.

அன்றும் தடபுடலான விருந்து நடைபெற்றது.

இதே கதை ஒரு வாரம் தொடர்ந்து நடைபெற்றது.

தினமும் புதிது புதிதாக மாடும் கன்றுக்குட்டியும் வந்துகொண்டே இருந்தன. இவர்களும் அவற்றை விற்று விட்டு தடபுடலான விருந்துகளையும் நடத்தி வந்தனர்.

எட்டாவது நாள் நாரதரைத் தேடி இந்திரன் ஓடிவந்து விட்டார்.

“உமது பக்தனுடைய தலைவிதிப்படி அவன் ஒரு மாட்டையும் கன்றுக்குட்டியையும் வைத்து பிழைப்பை நடத்தியாக வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் அவற்றை நீங்கள் இருவரும் விற்று விடுவதால், நான் தினமும் புதிது புதிதாக மாட்டையும் கன்றுக்குட்டியையும் கொண்டுவந்து கட்டவேண்டியுள்ளது. உமது பக்தனுக்கு என்ன வேண்டுமோ கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள். என்னை விட்டு விடுங்கள்” என்று நாரதரிடம் மன்றாடினார்.

இதுதான் விதியை வெல்லக்கூடிய அணுகுமுறையா?

இதுபோல் இன்னும் ஒரு சம்பவம்.

இதுவும் அந்தக் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு கதை.

அவர் ஒரு பெரிய வியாபாரி. அவருக்கு கோடிக்கணக்கான சொத்துகள் இருந்தன.

வியாபாரம் சம்பந்தமாக அவர் ஒரு கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்தார். கப்பல் நடுக்கடலில் சென்று கொண்டிருந்தது.

துரதிர்ஷ்டவசமாக அந்தக் கப்பல் ஒரு பெரிய புயலில் மாட்டிக்கொண்டது.

கப்பலைக் காப்பாற்ற, கப்பல் தலைவர் கடுமையாகப் போராடினார். அவரால் கட்டுப்படுத்த முடியாமல் கப்பல் தடுமாறியது.

கடைசியில் அவர் தனது இயலாமையை அறிவித்தார்: “கப்பலைக் காப்பாற்ற என்னால் முடிந்த வரைக்கும் போராடி விட்டேன். என்னால் வெற்றிபெற இயலவில்லை. எந்த நிமிடத்திலும் கப்பல் கவிழ்ந்து விடலாம். நீங்கள் அனைவரும் உங்கள் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொள்ளுங்கள்.!”

அந்த வியாபாரியும் தனது இஷ்ட தெய்வத்தை வணங்கி பிரார்த்தனை செய்தார்.

“இறைவா! என்னை இந்தப் புயலிலிருந்து காப்பாற்றி விடு. நகரத்திலுள்ள வீடுகளில் ஒன்றை விற்று பணத்தை உண்டியலில் போட்டு விடுகிறேன்” என்று அவர் கோரிக்கை வைத்தார்.

அவர் மரணமடைந்தால் எந்தவொரு சொத்துமே அவருக்குக் கிடைக்காமல் போய்விடும். பிரார்த்தனையின்படி அவர் காப்பாற்றப்பட்டால், ஒரேயொரு வீட்டை மட்டுமேதான் இழக்க வேண்டிவரும்.

அதனால் அவர் அப்படி பிரார்த்தனை செய்தார்.

ஆனால், என்ன ஆச்சரியம், அவர் பிரார்த்தனை செய்த ஐந்து நிமிடங்களில், கொடூரமாகத் தாக்கிய அந்தப் புயல், சுத்தமாக நின்றுபோய்விட்டது.

இப்போது அந்த வியாபாரிக்கு ஒரே வருத்தம்.

“அடடா! அவசரப்பட்டு விட்டோமே! பிரார்த்தனை செய்யாமலிருந்தால் கூட இந்தப் புயல் தானாகவே நின்றிருந்திருக்கும். அவசரப்பட்டு ஒரு கோடி ரூபா வீட்டை இழந்துவிட்டோமே!” - இப்படி சிந்தித்த அவர் நிம்மதி இல்லாமல் தவித்தார்.

அவரிடமிருந்த ஒவ்வொரு வீடும் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறும்.

அவர் கப்பலிலிருந்து கரையிறங்கும் முன்பு ஒரு வழியாக சுதாரித்துக்கொண்டார்.

அவர் கரைக்கு வந்ததும் அவருடைய ஒரு வீட்டை மட்டும் விலை பேச ஆரம்பித்தார்.

அந்த வீட்டை வாங்குபவர்கள் மீது மட்டும் ஒரு நிபந்தனையை விதித்தார்.

“இந்த வீட்டை வாங்குபவர்கள் இந்த வீட்டோடு சேர்த்து, நான் வளர்த்துவரும் நாய்க்குட்டியையும் வாங்க வேண்டும். நாய்க்குட்டியின் விலை ஒரு கோடி ரூபா. ஆனால், வீட்டின் விலை வெறும் பத்தாயிரம் ரூபா மட்டும்தான்.”

ஒருவர் ஒரு கோடி ரூபா கொடுத்து நாய்க்குட்டியையும் பத்தாயிரம் ரூபா கொடுத்து வீட்டையும் வாங்கிக் கொண்டார்.

இப்போது அந்த வியாபாரி, உண்டியலில் எவ்வளவு பணம் போடவேண்டும்?

வீட்டை விற்று வந்த பத்தாயிரம் ரூபாவை உண்டியலில் போட்டார். நாய்க்குட்டியை விற்று வந்த ஒரு கோடி ரூபாவை தனக்கு எடுத்துக்கொண்டார்.

விதியை எப்படி வென்றுவிட்டார் பார்த்தீர்களா?

இப்படிதான் விதியை வெல்ல வேண்டுமா?

ஓர் உதாரணம்.

நீங்கள் ஒரு நீதிபதி. கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு நான் உங்கள் முன்னால் குற்றவாளிக்கூண்டில் நிற்கிறேன்.

நான் பொருளாதார வசதி மிகுந்தவன்; அரசியல் செல்வாக்கு நிறைந்தவன்.

நான் உங்களிடம் பேரம் பேசுகிறேன்.

“சாட்சியங்கள் யாவும் நம்பும்படியாகவே உள்ளன. தீர்ப்பு உங்கள் கைகளில்தான் உள்ளது. நீங்கள் நினைத்தால் தண்டிக்கவும் செய்யலாம்; விடுதலையும் செய்யலாம். என்னை நீங்கள் விடுதலை செய்வீர்களேயானால், எனது சொத்துகளில் பாதியை உங்கள் பெயருக்கு மாற்றிக் கொடுத்துவிடுகிறேன். உங்களுக்கு உயர் பதவியையும் வாங்கிக் கொடுத்துவிடுகிறேன்” - இப்படி நான் கூறவும் நீங்களும் அதனை ஏற்றுக்கொண்டு, “நான் உன்னை விடுதலை செய்துவிடுகிறேன். நீயும் நீ வாக்கு கொடுத்தபடி நடந்துகொள்” என்று கூறுவதாக வைத்துக்கொள்வோம்.

இந்த அணுகுமுறை சரியானதாக இருக்க முடியுமா - நியாயமானதாக இருக்க முடியுமா?

பாவ கர்மாவை செய்துவிட்டு அதிலிருந்து தப்பிக்கும் நோக்கத்துடன், பரிகார பூஜைகள் எல்லாம் செய்வதற்கும் நீதிபதியிடம் பேரம் பேசுவதற்கும் வித்தியாசம் ஏதாவது உண்டா?

கர்ம வினை என்றால் என்ன?

பாவ கர்மா, புண்ணிய கர்மா என்றால் என்ன?

புண்ணிய கர்மாக்கள் செய்தால் வெகுமதிகள் கிடைக்குமா?

பாவ கர்மாக்கள் செய்தால் தண்டனை கிடைக்குமா?

நமக்கு நாமே செய்துகொள்ளும் செயல்கள் ஒருபோதும் கர்மாவாகக் கணக்கிடப்படுவதில்லை. அடுத்தவர்களுக்கு நல்லது செய்கிறோமா அல்லது கேடு விளைவிக்கிறோமா என்பதைப் பொருத்துதான் நற்கர்மா அல்லது மோசமான கர்மா ஏற்படுகிறது.

நற்செயல் என்பது எது?

அதற்கு மாறான செயல் என்பது எது?

இதற்கு ஏசுநாதர் சுலபமான ஒரு சூத்திரத்தைக் கூறி விட்டார்.

அதென்ன சூத்திரம்?

பிறர் உனக்கு என்னவெல்லாம் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அவற்றை நீ அவர்களுக்குச் செய்.

அதுபோல் என்னவெல்லாம் பிறர் உனக்கு செய்யக்கூடாது என்று விரும்புகின்றாயோ அவற்றை நீ அவர்களுக்குச் செய்யாதே.

நல்லது எது தவறானது எது என்பது நம் அனைவருக்கும் நம்மை அறியாமலேயே தெரிந்துவிடும்.

நாம் செய்யும் தவறான செயல்கள் அனைத்தும் நமது கணக்கில் பாவ கர்மாவாக இணைந்து விடுகின்றன.

அதுபோல் நாம் செய்யும் நற்செயல்கள் யாவும் நமது கணக்கில் புண்ணிய கர்மாக்களாக இணைந்துவிடுகின்றன.

பாவ கணக்குக்குத் தண்டனை கொடுக்கப்படுமா?

பாவத்தின் காரணமாக கஷ்டங்கள் நிச்சயம் ஏற்படும். ஆனால், அவை எவையும் தண்டனையாக இருக்காது.

ஏன் அப்படி?

நீங்கள் ஒரு பத்திரிகைக்காக சிறையிலுள்ள கைதிகளை பேட்டி எடுப்பதாக வைத்துக்கொள்வோம்.

“உன்னை ஏன் ஜெயிலில் அடைத்தனர்?” என்று ஒரு கைதியிடம் கேட்கிறோம்.

“ஒரு பெண்ணிடம் நகையைத் திருடும்போது மாட்டிக் கொண்டேன். எனக்கு தண்டனை கொடுத்து சிறையில் போட்டு விட்டார்கள்” என்று அவனும் கூறுகிறான்.

நாமும் ஒரு பேச்சுக்காக, “நகையைத் திருடியதற்காக உன்னை ஏன் ஜெயிலில் போடவேண்டும்?” என்று கேட்கிறோம்.

அதற்கு அவனும் “நகையைத் திருடியதற்காக விருந்தா வைப்பார்கள்? ஜெயிலில்தான் போடுவார்கள்” என்று கூறுகிறான்.

“அப்படி ஜெயிலில் போடவேண்டிய நோக்கம் என்ன?” என்று அவனிடமே கேட்கிறோம்.

“இத்தகைய குற்றங்களை நான் திரும்பவும் செய்யக்கூடாது என்பதற்காக எனக்கு இப்படி ஒரு தண்டனையைக் கொடுத்துள்ளார்கள்” என்று அவனும் கூறி விடுவான்.

இவ்வாறுதான் நமது பாவகர்மாக்களுக்கு தண்டனையாக கஷ்டங்கள் நமக்குக் கொடுக்கப்படுகின்றனவா?

என்ன தவறு செய்ததற்காக இந்தத் தண்டனை - கஷ்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது எவருக்காவது தெரியுமா?

அது எவருக்குமே தெரியாது.

முற்பிறவியில் செய்த தவறு என்ன?

இந்தப் பிறவியில் நாம் என்ன தவறை மீண்டும் செய்யக்கூடாது? - இந்த விபரங்கள் நம் எவருக்குமே தெரியாது.

ஆகவே, கர்மாவின் காரணமாக நாம் அனுபவிக்கக் கூடிய எந்தவொரு கஷ்டமும் தண்டனையாக நமக்குக் கொடுக்கப்படவில்லை.

கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அந்த கஷ்டங்களுக்குக் காரணம் நமது கர்மாவாக இருந்தபோதிலும், அவை தண்டனையாக வழங்கப்படாமல், நமக்கு வழிகாட்டும் அம்சமாகவே நமக்கு வழங்கப்படுகின்றன.

இன்பங்கள் அனைத்தும் நம்மை முடக்கிப்போட்டு விடும்.

துன்பங்கள் மட்டுமே உந்துசக்தியாக இருந்து நமக்கு வழியைக் காட்டும்.

நம்மை வழிநடத்தும் இறை அம்சமே நமக்கு இத்தகைய துன்பங்களைக் கொடுத்து நம்மை வழிநடத்துகின்றது.

நம்முடைய கர்மாவை மாற்றியமைக்கும் சக்தி நமக்கு உண்டா?

அதனையும் பார்த்திடுவோம்...

**நன்றி - மாலைமலர்**



# இந்திய வரைபடத்தில் இலங்கையும் ஏன் இருக்கிறது தெரியுமா?

## பலருக்கும் தெரியாத தகவல் இதோ!

சிறுவயதிலிருந்தே இந்திய வரைபடத்தைப் பார்த்து வருகிறோம். அந்த வரைபடத்தில் நாட்டின் எந்தப் பகுதியில் எந்த மாநிலம் இருக்கிறதென்று மார்க் பண்ணி சொல்வார்கள். இந்திய எல்லையை அழகாக வடிவமைத்துக் கொடுத்திருக்கும் படத்தில் பாகிஸ்தானோ நேபாளமோ எல்லைகள் குறிக்கப்பட்டிருக்காது.

ஆனால், பல தசாப்தங்களாக இந்திய வரைபடத்தில் இலங்கை நாட்டின் வரைபடத்தை பார்த்திருப்போம். இலங்கை என்பது தனி நாடு. அதன் மேல் இந்தியாவுக்கு எந்த உரிமையோ அதிகாரமோ கிடையாது. பின் எதற்காக இந்திய வரைபடத்தில் இலங்கையும் உள்ளது என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா? அதை பற்றிதான் இப்போது உங்களுக்கு சொல்ல இருக்கிறோம்.




இலங்கையை இந்திய வரைபடத்துடன் காட்டுவதற்குக் காரணம், கடல்சார் சட்டம்தான். இலங்கையை இந்திய வரைபடத்துடன் காட்டவில்லையென்றால், அது கடல்சார் சட்டத்தை மீறியதாக இருக்கும். இந்த காரணத்துக்காக இந்தியாவின் ஒவ்வொரு அதிகாரபூர்வ வரைபடத்திலும் இலங்கை காட்டப்பட்டுள்ளது.

***கடல்சார் சட்டம்:*** கடல்சார் சட்டம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி எந்த நாட்டின் எல்லையும் கடலுடன் இணைக்கப்பட்டிருந்தால் அந்த நாட்டின் எல்லை கடலிலிருந்து 200 நாட்டிக்கல் மைல் - அதாவது, சுமார் 370 கி.மீ. வரை நீண்டிருக்கும். இந்த 370 கி.மீ. தூரமும் சம்பந்தப்பட்ட நாட்டின் கடற்படையினர் குவிக்கப்படலாம். அந்த இடத்திலுள்ள தீவுகள், கட்டமைப்புகள் அவர்களது வரைபடத்தில் இருக்கவேண்டும்.

இந்த 370 கி.மீ. அடிப்படையில் பார்த்தால் இந்தியாவின் கடல் எல்லைக்குள் இலங்கை வருகிறது. உண்மையில், இந்தியாவின் கடைசி எல்லையான தமிழகத்தின் தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு 18 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. இதன்காரணமாக, கடல் சட்டத்தின்படி இந்தியாவும் தனது வரைபடத்தில் இலங்கையைக் காட்டுவது கட்டாயமாகிறது.

1956ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை கடல் சட்டம் தொடர்பான முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.

இந்த மாநாட்டில் பல நாடுகள் பங்கேற்றன. இந்த மாநாட்டில், கடல் எல்லை மற்றும் அது தொடர்பான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்தும் பரந்தளவிலான விவாதம் நடைபெற்றது. அதன் பிறகு இந்த விவாதம் பல நாட்கள் தொடர்ந்தது. பின்னர் 1973 மற்றும் 1982க்கிடையில் நடைபெற்ற மூன்றாவது கூட்டத்தில் இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் பல கடல்சார் சட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டன. இந்தச் சட்டங்களின்படி, ஒரு நாடு கடல் பகுதியில் 200 நாட்டிக்கல் மைல் தூரம் வரையிலான விஷயங்களை அதன் வரைபடங்களில் காட்டுவது கட்டாயமாகும்.

அத்தகைய சூழ்நிலையில், இலங்கையும் இந்தியாவின் கடல்சார் களத்தின் கீழ் வருகிறது, எனவே, அது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. இதே சட்டத்தின்படி இலங்கையும் தனது வரைபடத்தில் இந்தியாவின் சில பகுதிகளைக் காண்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 18ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மறக்கப்பட்ட தமிழர்கள்!

ஜனாதிபதியாக முதன்முதலில் பதவியேற்றபோது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழர்களுக்கு வாக்குறுதியொன்றை வழங்கினார்.

வடக்கு, கிழக்கில் காணாமற்போனவர்களைக் கண்டறிய விசேட ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாகவும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டோர் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுமென்றும் அப்போது அவர் கூறியிருந்தார்.

அதன்படி ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு நீண்ட விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பித்தது. படைகளில், பொலிஸில், ஆயுதக்குழுக்களில் இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட அநியாயங்கள், அக்கிரமங்கள் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தன. ஆனால், அந்த அறிக்கைக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை.

இப்போது பட்டலந்த அறிக்கை குறித்துப் பேசுவோர் மேற்படி ஆணைக்குழு அறிக்கை பற்றிப் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் முன்வருவார்களா என்று கேட்கத் தோன்றுகிறது.

“தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தூண்டுதலின் அழுத்தம் எதுவாக - எவ்வளவாக - இருந்தாலும், அரசாங்கம் ஒருபோதும் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை அனுமதித்திருக்கவோ அல்லது தானே இயக்கவோ கூடாது. பயங்கரவாதத்தை அரசின் பயங்கரவாதத்தால் அடக்குவதற்கான முயற்சி உண்மையான கிளர்ச்சியாளர்களை ஒழிப்பதை மட்டுமல்ல, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாத பல அப்பாவி இளைஞர்களின் மரணத்தையும் விளைவித்தது” - இது 37 ஆண்டுகளுக்கு முன்னர் செயற்பட்ட பட்டலந்த வதைமுகாம் குறித்து பத்து ஆண்டுகள் கழித்து நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் பின்னர் 1998இல் சமர்ப்பிக்கப்பட்ட அதன் அறிக்கையின் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயமாகும்.

இந்தக் குறிப்புரையில் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்ற இடத்தில் ஜே.வி.பி. என்று பதிவாகியிருந்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முகமூடி தலையாட்டிகளின் உத்தரவால் ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் கடத்தி காணாமலாக்கப்பட்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தொடர்பில் இப்போது பேச மறுப்பது அவர்கள் தமிழர்கள் என்பதாலா?

அரசாங்கம், தான் பயங்கரவாதம் என்று சித்திரிக்கும் ஒரு விடயத்தை அடக்குவதற்காக அரச பயங்கரவாதத்தைக் கையிலெடுக்கக் கூடாது என்பதைத்தான் இந்தப் பட்டலந்த வதைமுகாம் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் மேற்படி பரிந்துரை சுட்டிக்காட்டுகிறது.

அதுவே, இருபது ஆண்டுகளின் பின்னர் தமிழர்களுடைய சுதந்திரத்துக்கான விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதம் மூலம் இலங்கை ஆட்சி பீடம் அடக்கியபோதும் நடைபெற்று முடிந்திருக்கின்றது.

இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால், எண்பதுகளின் கடைசியில் கட்டவிழ்ந்த பட்டலந்த வதைமுகாம் உட்பட்ட அரச பயங்கரவாதம் தொடர்பில் உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்படவில்லை; நீதியும் பொறுப்புக்கூறலும் நிலைநாட்டப்படவில்லை.

அதேதான் தமிழர்களுடைய விடுதலைப் போராட்ட விடயத்திலும் நடைபெற்றது.

ஒரேயொரு விடயம் வித்தியாசம். எண்பதுகளின் இறுதியில் முடித்து வைக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியின்போது அரச பயங்கரவாதத்தால் ஏற்படுத்தப்பட்ட படுகொலைகள், சொத்தழிவுகள், நாசங்களோடு ஒப்பீடு செய்கையில் 2009 வரை தமிழர்களின் போராட்டத்தை அடக்குவதற்காகப் புரியப்பட்ட அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட உயிர், உடைமை, சொத்திழப்புகள் பல மடங்குகள் அதிகம்.

இரண்டிலுமே உண்மைகள் வெளிவரவில்லை; நீதி நிலைநாட்டப்படவில்லை; பொறுப்புக் கூறல் முன்னெடுக்கப்படவில்லை; இழப்பீடுகள் வழங்கப்படவில்லை; தமிழர்களின் உரிமைக்கான போராட்ட விடயத்தில் மீள நிகழாமையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால், ஒவ்வொரு தடவையும் இத்தகைய பிரச்சினைகளைக் கையாளும் பேரில் அரசாங்கம் முன்னெடுக்கும் அரச பயங்கரவாதம் தண்டிக்கப்படாமல் தங்கு தடையின்றித் தன் கைவரிசையைக் காட்டிச் சென்றிருப்பதுதான் இதில் துரதிர்ஷ்டம்.

இதற்கிடையில் பட்டலந்த வதைமுகாம் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருக்கிறார். அது பற்றி விரிவான அறிக்கையொன்றையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி கட்டவிழ்ந்து உச்சம் பெற்றிருந்த காலத்தில், தமது தொகுதியில் இருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக அப்பகுதியில் பாதுகாப்புத் தரப்பினருக்கு வீடுகள், தங்குமிடங்களைத் தேடிக்கொடுக்க வேண்டிய பொறுப்பு தம்மிடம் வழங்கப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

அந்த இடங்களைத் தேடிப்பெற்றுக்கொடுத்தமை தொடர்பாகவே அந்த ஆணைக்குழு அறிக்கையில் தன்மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன என அவர் அந்த அறிக்கையில் கோடிகாட்டியிருக்கிறார்.

வீடுகளைப் பொறுப்பேற்று பொலிஸ் மா அதிபர்மூலம் கையளிக்காமல் நேரடியாக சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கியமை தவறு என்ற சாரப்பட தம்மீது அந்த அறிக்கையில் குற்றஞ்சுமத்தப்பட்டிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க விளக்கம் கூறுகிறார்.

அது உண்மையாக இருக்கலாம். அப்படிப் பார்த்தால் யுத்த காலத்தில தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களிடமிருந்து சூறையாடப்பட்ட பல்லாயிரம் வீடுகள், காணிகள், சொத்துகள் இற்றைவரை உரிய முறையில் கையாளப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க மேற்படி பட்டலந்த வதைமுகாம் அறிக்கையில் குற்றஞ்சுமத்தப்பட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் இலங்கையில் யுத்தகாலத்தில் தமிழர்களின் சொத்துகளைச் சூறையாடி, ஆக்கிரமித்தவர்கள் பல்லாயிரம் பேர் இப்போது வரிசையாக அதே குற்றச்சாட்டுக்காக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர்களிடமிருந்து சட்டவிரோதமான முறையில் பிடுங்கப்பட்ட நிலங்களை பல தசாப்தங்களாக ஆக்கிரமித்துக் கையாண்டு, அவற்றில் கட்டிடங்கள் கட்டி, மூன்றாம் தரப்புகளுக்கு அரசாங்கமே சட்டவிரோதமாக வாடகைக்கு கொடுக்கின்ற அநியாயம் இந்த நாட்டில் இன்றுவரை தாராளமாக நீடிக்கும் போது, ஜே.வி.பியின் கலவரங்களை - கிளர்ச்சியை - அடக்குவதற்காகப் பாதுகாப்புத் தரப்பினருக்கு சில வீடுகளைப் பெற்றுக்கொடுத்த தொகுதி எம்.பி. ரணிலின் செயல் பெரிய குற்றமாகக் கருதப்படக்கூடியதல்ல. அவற்றையும் தாண்டி, ரணில் வேறு என்ன செய்தார் என்பதுதான் கேள்வி.

தமிழர்கள் கொலைசெய்யப்பட்டால், கடத்திக் காணாமலாக்கப்பட்டால் அவை தொடர்பில் அக்கறையற்ற சிங்கள மனநிலைப்போக்கு தென்னிலங்கையில் நடந்த இதே விடயங்களுக்காக கண்ணீர் வடிக்கிறது. தமிழர்கள் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு எது உதாரணமாக இருக்க முடியும்?






# கழிவு முகாமைத்துவத்தின் முன்மாதிரியாக விளங்கும் வட்டகொட தோட்டம்

எழில்மிகு மலையகத்தின் வட்டகொட பிரதேசமானது, பல்வேறுபட்ட விசேட சூழலியல் அமைப்புகளைக்கொண்டு விளங்குகிறது. பல சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு நாளும் பெக்கோ டிரயில் (Pakoe Trail) பாதையினூடாக அங்கு பயணிக்கின்றனர். கண்ணைக் கவரும் மனதுக்கு இதத்தை அள்ளித்தரும் பல சுவாரஸ்யமான இயற்கைப் படைப்புகளைக்கொண்டு அமைந்ததே இப்பிரதேசம். கிறேட்வெஸ்டர்ன் மலைத்தொடர், பிரித்தானியர் காலத்தில் குதிரைகள் செல்வதற்காக விசேடமாக அமைக்கப்பட்ட குதிரைப்பாலம், மலையடிவாரத்தில் அமைந்துள்ள குளம் போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளது வட்டகொட பிரதேசம்.

இயற்கை அன்னையின் கொடையான வட்டகொட பிரதேசத்தின் மாபெரும் சவாலாக விளங்குவது கழிவுகள் ஆகும். ஆம், இயற்கை வளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுகள் தொடர்பான முகாமைத்துவம் இங்கு எவ்வாறு பேணப்படுகிறது என்பதைச் சற்று நோக்குவோம்.

மலையகத்தில் கழிவுகள் தொடர்பான முகாமைத்துவம் பற்றிப் பேசும்போது சற்றுச் சிந்திக்கக்கூடிய விடயமாகக் கருதப்படுகின்றதும் தற்போது மாபெரும் பிரச்சினையாகத் தலைத்தூக்கியுள்ளதும் கழிவுகளை முகாமைத்துவப்படுத்துவதேயாகும்.

மலையகப் பிரதேசங்களில் அநேகமாக தொடர் குடியிருப்புகளே காணப்படுகின்றன. இச்சூழலில் பெரும் சிரமத்துக்கு மத்தியிலேயே தமது வாழ்க்கைப் பயணத்தை மக்கள் நடத்திச் செல்கின்றனர். இவ்வாறான நிலைமைகளில் தத்தமது வீடுகளில் சேரும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான போதியளவு இடவசதி இன்மை மற்றும் இது தொடர்பான விழிப்புணர்வு மலையக மக்களிடையே குறைவாகக் காணப்படுகிறது.

கழிவுப் பொருட்களானது முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு கழிவுகள் பல்வேறு விதிமுறைகளுக்கூடாக மேலாண்மை செய்யப்படுகின்றன. மலையகத்தின் நகர்ப்புறங்களில் பிரதேச சபை அல்லது நகர சபையினூடாக கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. ஆனால், தோட்டப்புறங்களில் கழிவுகள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றதென நோக்கும் போது இதில் பெருமளவு தோட்ட நிர்வாகத்தின் தலையீடும் காணப்படுகின்றது.

மலையக மக்கள் பொதுவாக தமது வீட்டில் சேரும் கழிவுகளை ஓர் இடத்தில் போடுகின்றனர். இது சுற்றாடல் மாசடைவதற்கு பாரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. பாதைகள், வீதியோரங்கள், மரத்தடிகள், குளக்கரைகள் போன்ற இடங்களில் கழிவுகள் எறியப்படுவதனால் சுற்றாடல் மாசடைகிறது. இது தனிமனித சுகாதாரத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமைகிறது. சுற்றுச்சூழலின் அழகியல் தன்மையிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே, இவ்வாறான இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தவிர்ப்பதற்கு தோட்ட நிர்வாகத்தினரால் பல்வேறுபட்ட உத்திகள் கையாளப்பட்ட போதிலும், அவை அனைத்தும் சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றன எனலாம்.

பிரதானமாக கழிவுப்பொருட்கள் இரண்டு வகைகளில் பிரிக்கப்படுகின்றன. அவை உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் என்பவையாகும். உக்கும் கழிவுகள் சேதனப்பசளைத் தயாரிப்புக்கும் உக்காத கழிவுகள் மீள்சுழற்சிக்கும் உட்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

**கழிவுப்பொருள் முகாமைத்துவம் பிரதான 03 கொள்கைகளைக் கொண்டது.**

01. Reduce - பாவனையை குறைப்பது
02. Reuse – மீள் பயன்பாடு
03. Recycle - மீள் சுழற்சி

இதன் நோக்கமானது கழிவுப் பொருளிலிருந்து உச்சளவு பயன்பாட்டை அடைவது மற்றும் குறைந்தளவிலான குப்பைகளை உருவாக்குவதாகும்.

**கழிவு முகாமைத்துவம் வட்டகொட தோட்டத்தில் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது?**

அதாவது, முதற்கட்ட நடவடிக்கையாக பிரதேச மக்களிடையே கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கழிவுகளால் ஏற்படும் சூழல் பாதிப்புகள் பற்றியும் எடுத்துக் கூறி முதற்கட்ட நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளுக்கும் கழிவுகளைத் தனித்தனியாகப் போடுவதற்கு பைகள் வழங்கப்பட்டு வாரத்தில் இரண்டு தடவைகள் இக்கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுகள் உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் என வேறு பிரிக்கப்பட்டு உக்கும் கழிவுகள் Compost செய்யப்பட்டு சேதனப்பசளை தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும் பசளை தேயிலைச் செடிகளுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமன்றி, தேயிலை நாற்றுமேடைகளுக்கும் இடப்படுகின்றது. இதனால் சுற்றுப்புறச் சூழலும் உயிர்ப்பல்வகைமையும் பாதுகாக்கப்படுகின்றன. அத்துடன், மேலதிக வருமானத்தைப் பெற்றுத்தரும் ஒரு செயற்றிட்டமாக இது மேற்கொள்ளப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், உக்காத கழிவுகளான கண்ணாடி, பொலித்தீன், பிளாஸ்ரிக் என்பன மீள்சுழற்சிக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. தோட்ட நிர்வாகத்தால் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் இதனை மேற்கொள்கின்றனர்.

எனவே, எதிர்காலத்திலும் இவ்வகை முன்மாதிரியான செயற்பாடுகள் மலையகப் பிரதேசத்தில் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் மலர்ச்சி மிக்க பசுமையான மலையகத்தைப் பாதுகாக்க முடியும். அத்துடன், இயற்கை வளத்தை எமது எதிர்கால சந்ததியினருக்காகப் பேண முடியும்.



*முருகையா தவமணிதேவி*

## நக்கல் நமசிவாயம்

*நீதி கிடைக்காவிடில் வீதிக்கு இறங்கப்போகிறாராம் பேராயர் ஐயா... எந்த அரசாங்கம் வந்தாலும் வெறும் வாய்ப்பேச்சுத்தான்.. ஒன்றும் நடக்காது பாருங்கோ...*



## இன்றைய நாளில்...

- 633 – கலிபா அபூபக்கரின் தலைமையில் அரேபியத் தீபகற்பம் ஒன்றுபட்டது.
- 1068 – லெவண்டம், அரேபியத் தீபகற்பம் ஆகியவற்றில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 20,000 பேர் வரை இறந்தனர்.
- 1229 – 6ஆவது சிலுவைப் போர்: புனித உரோமப் பேரரசர் இரண்டாம் பிரெட்ரிக் தன்னை எருசலேமின் மன்னராக அறிவித்தார்.
- 1922 – ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலையானார்.
- 1962 – 1954 இல் ஆரம்பமான அல்ஜீரிய விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1965 – சோவியத் விண்ணோடி அலெக்சி லியோனொவ் வஸ்கோத்-2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.
- 1989 – எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழைமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1994 – பொஸ்னியாவின் பொஸ்னியர்களும் குரொவாசியர்களும் போரை முடிவுக்குக் கொண்டுவர அமைதி உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டனர்.

## தவக்கால சிந்தனை

### மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்



அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப்போலப் பிதற்ற வேண்டாம்; மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்: “விண்ணுலகிலிருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்.

# உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்

## ரோஹித அபேகுணவர்தன எம்.பி. வலியுறுத்து



''கத்தோலிக்கர்களில் 99 சதவீதமானோர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள். குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கிடைக்கும், பிரதான சூத்திரதாரி பகிரங்கப்படுத்தப்படுவார் என்று கத்தோலிக்க மக்கள் இன்றும் எதிர்பார்த்துள்ளார்கள். எனவே உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்'' - என்று புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட எம்.பி.ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''சிறுவர், மகளிர் விவகாரங்கள் அமைச்சர் சரோஜா போல்ராஜ் தொடர்பில் சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகங்களில் திட்டமிட்ட வகையில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பில் சபை முதல்வர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். நான் கடந்த 25 ஆண்டுகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கிறேன்.

நன்மை செய்தாலும் விமர்சிப்பார்கள், தீங்கு செய்தாலும் விமர்சிப்பார்கள். பாராளுமன்றத்துக்கு வந்துவிட்டால் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மகளிர் விவகார அமைச்சர் எடுக்கும் தீர்மானங்கள் எந்த இனத்துக்கும் மதத்துக்கும் பாதகமாக அமையக் கூடாது.

இலங்கையில் மூவின மக்கள் வாழ்கிறார்கள். அனைத்து இனத்தவர்களின் மத சுதந்திரங்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் இலங்கையர் என்ற அபிமானம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம் விசேட திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று எதிர்வரும் மாதம் 21ஆம் திகதியுடன் 06 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்தத் தாக்குதலால் 269 பேர் கொல்லப்பட்டார்கள். 500க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பலர் இன்றும் பாதிப்பிலிருந்து மீளவில்லை. ஆகவே இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையான சூத்திரதாரியை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கத்தோலிக்க சபை தொடர்ச்சியாக வலியுறுத்துகிறது. 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எமது அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருப்பினும் நோக்கம் வெற்றி பெறவில்லை.

கத்தோலிக்கர்களில் 99 சதவீதமானோர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள். குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துக்கு நீதி கிடைக்கும், பிரதான சூத்திரதாரி பகிரங்கப்படுத்தப்படுவார் என்று கத்தோலிக்க மக்கள் இன்றும் எதிர்பார்த்துள்ளார்கள்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் மாதம் 21ஆம் திகதிவரை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்காவிடின் அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபடப்போவதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் கத்தோலிக்கர்கள் மாத்திரமல்ல, முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டார்கள். முஸ்லிம் சமூகத்தினர் வீதிக்கு இறங்க முடியாத நிலை காணப்பட்டது. அனைத்து முஸ்லிம்களும் குண்டுத்தாக்குதல் தாரிகளை போன்று தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டார்கள். ஆகவே இவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

குண்டுத்தாக்குதல் விவகாரத்தின் உண்மையை இந்த அரசாங்கம் வெளிக்கொண்டு வர வேண்டும். அடுத்த அரசாங்கத்துக்கு மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய பிரதான சூத்திரதாரியை பகிரங்கப்படுத்தி கடுமையான தண்டனை வழங்க வேண்டும்'' என்றார்.

# அரபுமொழி புத்தகங்களுக்கான இறக்குமதி தடையை அரசாங்கம் நீக்க வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை



''அரபு மொழி புத்தகங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதற்கு இருக்கும் தடைகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் ஒருவருடத்துக்கு முன்னர் சவூதி அரேபியாவில் இருந்து அனுப்பப்பட்ட சுமார் 26ஆயிரம் அல்குர்ஆன் தமிழ்மொழி பெயர்ப்பு பிரதிகள் இன்னும் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்தினார். பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

இலங்கையில் 321 பதிவுசெய்யப்பட்ட அரபுக் கல்லூரிகள் இருக்கின்றன. 132 பதிவு செய்யப்படாத அரபுக் கல்லூரிகள் இருக்கின்றன. 72 அரபுக்கல்லூரிகள் பதிவுக்காக விண்ணப்பித்துள்ளன. அந்த பதிவுகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

அதேநேரம் இந்த அரபுக் கல்லூரிகள் அனைத்தும் பொதுவான பாடத்திட்டம் ஒன்றின் ஊடாக கொண்டுசெல்லப்பட வேண்டும். இது தொடர்பில் பல வருடங்களுக்கு முன்னர் பேசப்பட்டுவந்த நிலையில், பொதுவான பாடத்திட்டம் அமைக்க குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்னும் சில குழுக்களும் அமைக்கப்பட்டு அவையும் குறித்த பாடத்திட்டத்துக்கு அனுமதியளித்திருக்கிறது. எனவே அரசாங்கம் இந்தப் பாடத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று அரபுக் கல்லூரிகளில் நடத்தப்படும் பரீட்சைகளை பரீட்சைகள் திணைக்களம் ஊடாக நடத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், பள்ளிவாசல்களில் கடமை புரியும் உலமாக்கள் மற்றும் முஅத்தீன்களுக்கு முறையான பயிற்சித் திட்டம் ஒன்று முஸ்லிம் கலாசாரத் திணைக்களம் ஊடாக நடத்தப்பட வேண்டும். அதற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இதேவேளை, முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பிராந்தியம் ஒன்று மட்டக்களப்பில் இருக்கிறது. 15 வருடங்களுக்கு முன்னர் இது அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இன்னும் முறையாக இயங்காமல் இருக்கிறது. அதனால் அதற்கு ஒரு உதவி பணிப்பாளர் ஒருவரை நியமித்தும் தேவையான அதிகாரிகளை நியமித்தும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், அரபு மொழி புத்தகங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவருவதற்கு இருக்கும் தடைகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் ஒருவருடங்களுக்கு முன்னர் சவூதி அரேபியாவில் இருந்து அனுப்பப்பட்ட சுமார் 26ஆயிரம் அல்குர்ஆன் தமிழ்மொழி பெயர்ப்பு பிரதிகள் இன்னும் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையும் விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

# சிறுவயது திருமணத்தில் முஸ்லிம் சமூகத்தை மாத்திரம் சுட்டிக்காட்டி பேசுவது அரசியல் சதித்திட்டமாகும்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. சுட்டிக்காட்டு



''இலங்கையில் சிறுவயது திருமணம் அனைத்து இனத்தவர்களிலும் நடக்கின்றது. இந்நிலையில் சிறுவயது திருமணத்தில் முஸ்லிம் சமூகத்தை மாத்திரம் சுட்டிக்காட்டி பேசி வருவதன் பின்னணியில் அரசியல் சதித்திட்டம் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது'' என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''சிறுவயது திருமணங்கள் தொடர்பில் புள்ளிவிபரத் திணைக்களம் இறுதியாக 2012ஆம் ஆண்டில் வெளியிட்ட ஆய்வு அறிக்கையின் பிரகாரம், 17 வயதுக்கு குறைந்த வயதில் திருமணம் முடித்தவர்களின் இன அடிப்படையில் பார்ப்போமானால், சிங்கள இனத்தவர்களில் 21,510 சிறுவயது திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. அது நூற்றுக்கு 69 வீதமாகும். இலங்கை தமிழ் இனத்தவர்களில் 3,925 சிறுவயது திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. அது நூற்றுக்கு 13 வீதமாகும். மலையக மக்களில் 1,312 சிறுவயது திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. அது நூற்றுக்கு 08 வீதம். அதேநேரம் முஸ்லிம் இனத்தவர்களில் 4321 சிறுவயது திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. அது நூற்றுக்கு 14 வீதம்.

இலங்கை புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் சிறுவயது திருமணம் அனைத்து இன சமூகத்திலும் இடம்பெற்றிருக்கிறது. அப்படியானால், இது ஒரு பொதுப் பிரச்சினை. அவ்வாறிருக்கையில் இதனை ஒரு பொதுப் பிரச்சினையாக பார்க்காமல் முஸ்லிம் சமூகத்தை மாத்திரம் சுட்டிக்காட்டி பேசுவதாக இருந்தால் அதன் பின்னணியில் வேறு சதித்திட்டங்கள் அல்லது அரசியல் நிகழ்ச்சி நிரல் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதேநேரம் இந் நாட்டில் ஒரு சட்டம்தான் இருக்க வேண்டும் என அர்ச்சுனா எம்.பி. தெரிவித்திருந்தார். இந்த நாட்டில் பல இன மக்கள் வாழுகின்றனர். அந்த இனங்களுக்கு தனியார் சட்டங்கள் இருக்கின்றன. முஸ்லிம் மக்களுக்கு முஸ்லிம் தனியார் சட்டம் இருக்கிறது. கண்டியில் இருக்கும் மக்களுக்கு மலைநாட்டு சட்டம் இருக்கிறது. தமிழ் மக்களுக்கு தேசவழமை சட்டம் இருக்கிறது. இந்த சட்டங்கள் நாட்டில் இருக்கவேண்டும். அந்த மதங்களுக்கு என சில தனியான அடையாளங்கள் இருக்கின்றன. அதனால் இவ்வாறான சட்டங்கள் இருந்தால்தான் எமது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும். அந்த சட்டங்களை யாரும் நிராகரித்ததில்லை.

எனவே அர்ச்சுனா எம்.பி. சிறுபான்மை மக்கள் பிரதிநிதியாக இருந்துகொண்டு வேறு ஒரு சிறுபான்மை மக்களின் உரிமைக்கு எதிராக பேசுவது, அவரை இந்த பாராளுமன்றத்துக்கு வாக்களித்து அனுப்பிய மக்களுக்கு செய்யும் அவமானமாகும். தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த நாட்டில் இருந்துவந்த எந்த அரசாங்கமும் அந்தப் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வுகளை வழங்கியதில்லை. அதனாலேயே நாட்டில் 30 வருட யுத்தம் ஒன்று இடம்பெற்றது. எனவே நாட்டில் இருக்கும் அனைத்து மதங்களின் கலாசாரங்களை மதித்து செயற்பட வேண்டும்'' என்றார்.




***யார் ரமழானில் ஒரு சுன்னத்தான அமலை செய்கின்றாரோ அவருக்கு ஒரு பர்ழான அமல் செய்த கூலி கிடைக்கும். அதேபோன்று யார் ஒரு பர்ழான அமலை செய்கின்றாரோ அவருக்கு 70 பர்ழான அமல்கள் செய்த கூலி கிடைக்கும் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.***

***(ஆதாரம், புகாரி, முஸ்லிம்)***

***எனவே ரமழானில் பாதி நாட்கள் எம்மைவிட்டு சென்றுள்ள நிலையில் எஞ்சியுள்ள தினங்களில் பர்ழான அமல்களை கட்டாயம் செய்வதுடன் சுன்னத்தான அமல்களையும் அதிகமதிகம் செய்து கூடுதலான நன்மைகளை அடைந்துகொள்ள முயற்சிப்போம்.***

**(தொழுகை நேரங்கள்)**
**(14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.03 |
| சூரிய உதயம் | - | 6.18 |
| ளுஹர் | - | 12.21 |
| அஸர் | - | 3.35 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.31 |


# கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

ST&IS SINCE 1892

COMMERCIAL CREDIT

## மாபெரும் வாகன ஏல விற்பனை

## 2025 மார்ச் மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை

தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல் எனும் முகவரியில் காலை 10.00 மணி முதல்

**முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் உட்பட டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள் சுமார் 155**

| | | | |
|---|---|---|---|
| **SUV** | | | |
| WP-CAO | - 7XXX | NISSAN X-TRAIL | 2015 |
| **கார்** | | | |
| 15 | - 0XXX | HONDA ACCORD | 1987 |
| NC-GO | - 3XXX | HONDA CAPA | 1999 |
| 14 | - 2XXX | TOYOTA CARINA | 1983 |
| WP-GS | - 0XXX | NISSAN CEFIRO | 1999 |
| 14 | - 1XXX | MITSUBISHI LANCER | 1986 |
| CP-KC | - 3XXX | TATA INDIGO MARINA GLX | 2006 |
| 18 | - 1XXX | SUBARU JF1AC1HR0CB | 1992 |
| 13 | - 0XXX | MITSUBISHI LANCER | 1979 |
| 300 | - 0XXX | NISSAN MARCH K11 | 1993 |
| WP-HP | - 4XXX | MAZDA MILLENIA | 2001 |
| WP-KO | - 6XXX | TATA NANO | 2011 |
| 18 | - 7XXX | DAEWOO RACER | 1993 |
| **வேன்** | | | |
| 20 | - 1XXX | MITSUBISHI L300 DELICA | 1986 |
| 50 | - 0XXX | TOYOTA LH30V | 1980 |
| 60 | - 1XXX | TOYOTA LH30V | 1980 |
| **லொறி மற்றும் மினி ட்ரக்** | | | |
| 43 | - 0XXX | TATA 1210 SE | 1991 |
| NC-LI | - 4XXX | FOTON BJ1010V0JA32 | 2007 |
| NW-LE | - 6XXX | FOTON BJ1010V0JA32 | 2007 |
| 227 | - 8XXX | MAZDA BROWNY | 1994 |
| UP-LF | - 8XXX | FAW CA1030K3-2 | 2008 |
| SG-GB | - 7XXX | LANKA ASHOK LEAYLAND COMET | 2000 |
| 40 | - 8XXX | ISUZU ELF TLD55 | 1980 |
| 226 | - 7XXX | NISSAN G2H41 | 1993 |
| NC-PQ | - 7XXX | YUEJIN NJ1020DU | 2011 |
| 47 | - 1XXX | ISUZU NKR58E | 1991 |
| NW-DAC | - 5XXX | TATA ACE ZIP | 2015 |
| EP-PX | - 5XXX | TATA ACE ZIP | 2013 |
| NC-PT | - 4XXX | TATA ACE ZIP | 2012 |
| CP-PV | - 4XXX | TATA ACE ZIP | 2013 |
| SP-DAD | - 0XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| EP-PV | - 2XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| NP-DAC | - 5XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| SG-PP | - 8XXX | FOTON BJ1010V0JA32 | 2010 |
| CP-PX | - 2XXX | FOTON BJ1010V0JA32 | 2014 |
| CP-DAE | - 6XXX | FOTON BJ1010V0JA32 | 2015 |
| NW-PY | - 6XXX | FOTON BJ1010V0JA32 | 2014 |
| NW-LD | - 4XXX | MAHINDRA BOLERO | 2007 |
| CP-PX | - 7XXX | DFSK EQ1020DR | 2013 |
| UP-PX | - 0XXX | DFSK EQ1020DR | 2013 |
| SG-DAC | - 3XXX | MAHINDRA JEETO X7 | 2015 |
| WP-PR | - 7XXX | MAHINDRA MAXXIMO | 2011 |
| NW-PR | - 5XXX | MAHINDRA MAXXIMO | 2011 |
| WP-PT | - 3XXX | MAHINDRA MAXXIMO | 2012 |
| SG-PW | - 7XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| WP-PY | - 0XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2014 |
| WP-PX | - 0XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| CP-PV | - 8XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| NC-PX | - 2XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2014 |
| NP-PS | - 5XXX | TATA SUPER ACE | 2012 |
| WP-DAH | - 2XXX | TATA SUPER ACE | 2019 |
| WP-PW | - 3XXX | PIAGGIO TRUCK PLUS | 2012 |
| **டிராக்டர்** | | | |
| NC-RF | - 7XXX | POWER TRACK EURO 45 | 2018 |
| NW-RF | - 6XXX | MASSEY FERGUSON MF-1552 | 2017 |
| **QUADRI CYCLE** | | | |
| CP-GAA | - 2XXX | BAJAJ QUTE | 2020 |
| **முச்சக்கரவண்டிகள்** | | | |
| NW-HV | - 7XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-JH | - 6XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-HK | - 1XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-HX | - 4XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-QD | - 1XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| SP-JF | - 5XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| NP-HO | - 6XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-JS | - 4XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| NW-QG | - 3XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| NW-HZ | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-JV | - 0XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-HX | - 0XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| CP-QE | - 1XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-HS | - 0XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| CP-HU | - 5XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WPQM | - 5XXX | BAJAJ 2 STROKE | 2007 |
| WP-QB | - 0XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-HZ | - 6XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| SP-QJ | - 8XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| SG-QW | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |

| | | | |
|---|---|---|---|
| **முச்சக்கரவண்டிகள்** | | | |
| EP-AAQ | - 2XXX | BAJAJ 4 STROKE | 2014 |
| CP-QZ | - 7XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-AAK | - 2XXX | BAJAJ 4 STROKE | 2013 |
| WP-AAY | - 0XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| WP-QN | - 9XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QV | - 6XXX | BAJAJ 4 STROKE | 2009 |
| CP-QK | - 2XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| CP-AAI | - 8XXX | BAJAJ 4 STROKE | 2013 |
| NC-AAF | - 1XXX | BAJAJ 4 STROKE | 2012 |
| CP-QO | - 2XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-YA | - 3XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| WP-QJ | - 1XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| UP-YF | - 8XXX | PIAGGIO APE | 2010 |
| NP-YP | - 9XXX | TVS KING | 2011 |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| NW-BAN | - 9XXX | HONDA ACTIVA | 2016 |
| NC-BJA | - 8XXX | HERO APRILIA | 2020 |
| CP-BDO | - 0XXX | BAJAJ CT 100 | 2016 |
| CP-BBF | - 8XXX | BAJAJ CT 100 | 2014 |
| NW-XS | - 6XXX | BAJAJ CT 100 | 2012 |
| NP-BFL | - 7XXX | BAJAJ CT 100 | 2017 |
| NW-BCV | - 8XXX | BAJAJ CT 100 | 2015 |
| NP-BIU | - 0XXX | HERO DESTINY 125 | 2019 |
| NC-BFH | - 9XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| EP-XJ | - 2XXX | HONDA DIO SCV 110 | 2012 |
| CP-BDK | - 4XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| NP-BEK | - 5XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-BAO | - 6XXX | HONDA DIO SCV 110 | 2013 |
| NW-BII | - 6XXX | HONDA DIO SCV 110 | 2019 |
| NW-BEX | - 6XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| NW-BEW | - 4XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-XR | - 4XXX | BAJAJ DISCOVER 125 | 2012 |
| CP-BBN | - 3XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| NW-BBP | - 8XXX | BAJAJ DISCOVER 125 M | 2014 |
| EP-BHZ | - 7XXX | KTM DUKE 125 | 2019 |
| EP-BIA | - 1XXX | KTM DUKE 125 | 2019 |
| NC-BJE | - 3XXX | YADEA E8S PRO | 2023 |
| NP-BDK | - 6XXX | YAMAHA FAZER | 2016 |
| NW-BCG | - 7XXX | YAMAHA FZ-S | 2015 |
| EP-BHV | - 9XXX | SUZUKI GIXXER-GSX-150 | 2018 |
| UP-WC | - 6XXX | HERO GLAMOUR FI | 2010 |
| NC-BJE | - 8XXX | SENARO GN 125 | 2023 |
| NP-BJE | - 1XXX | SENARO GN 125 | 2023 |
| NP-BJF | - 5XXX | SENARO GN 125 | 2023 |
| UP-BJC | - 3XXX | RANOMOTO GN 125 | 2022 |
| NW-BFM | - 3XXX | MAHINDRA GUSTO | 2017 |
| WP-BGZ | - 1XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| EP-BIC | - 8XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| NW-BIO | - 5XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| EP-BHR | - 1XXX | TVS METRO | 2018 |
| CP-BHA | - 0XXX | TVS NTORQ | 2018 |
| NC-BGN | - 2XXX | BAJAJ PLATINA | 2018 |
| WP-XI | - 3XXX | HERO PLEASURE | 2011 |
| NW-BCP | - 8XXX | HERO PLEASURE | 2015 |
| NW-BAH | - 5XXX | HERO PLEASURE | 2013 |
| UP-WJ | - 2XXX | BAJAJ PULSAR 135 LS | 2011 |
| NW-WJ | - 6XXX | BAJAJ PULSAR 135 LS | 2011 |
| NC-WL | - 8XXX | BAJAJ PULSAR 135 LS | 2011 |
| CP-BDU | - 8XXX | BAJAJ PULSAR 135 LS | 2016 |
| EP-BGJ | - 3XXX | BAJAJ PULSAR 150CC | 2019 |
| EP-BEF | - 2XXX | BAJAJ PULSAR 150CC | 2016 |
| SG-BDA | - 4XXX | BAJAJ PULSAR 150CC | 2015 |
| NC-BCY | - 5XXX | BAJAJ PULSAR 150CC | 2015 |
| WP-BCF | - 7XXX | BAJAJ PULSAR 150CC | 2015 |
| WP-BHG | - 4XXX | BAJAJ PULSAR 200NS | 2018 |
| WP-BGZ | - 1XXX | BAJAJ PULSAR 200NS | 2018 |
| EP-BHA | - 9XXX | BAJAJ PULSAR 200NS | 2018 |
| NW-BGH | - 5XXX | YAMAHA RAY ZR | 2018 |
| CP-BEB | - 0XXX | YAMAHA RAY ZR | 2016 |
| NC-BHG | - 4XXX | YAMAHA RAY ZR | 2018 |
| WP-BJF | - 4XXX | DYNO SCOOBY 125 | 2023 |
| WP-BBW | - 4XXX | HERO SPLENDOR I-SMART | 2014 |
| SP-BHF | - 4XXX | APRILIA SR 125 | 2018 |
| NC-BHI | - 5XXX | TVS STRYKER | 2018 |
| WP-BJB | - 1XXX | RANOMOTO SWEETY DOUBLE POWER | 2020 |
| WP-BIO | - 7XXX | YAMAHA SZ | 2020 |
| EP-BDD | - 7XXX | TVS WEGO | 2015 |
| CP-BEJ | - 3XXX | TVS WEGO 110 | 2016 |
| EP-BEQ | - 0XXX | TVS XL-HD 70 | 2016 |
| NW-BDB | - 0XXX | HERO XTREME SPORTS | 2015 |
| NW-BFM | - 6XXX | YAMAHA YC125-S | 2017 |

வாகன பரிசீலனை : மார்ச் 19ஆம் திகதி முதல் மார்ச் 20ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை ஏலம் நடைபெறும் இடம் தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல். தொடர்புகளுக்கு : 0112 000 000

வாகன விற்பனைக்கான நிபந்தனைகள்

- உள்நுழைவு : ஒருவர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.1,500/- யும் மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ.10,000/- யும் வைப்புத்தொகையாக ஏலம் இடம்பெறும் தினத்தில் செலுத்த வேண்டும்.
- பணக் கொடுப்பனவு : மீளளிக்கப்படாத ஆரம்ப வைப்பு வாகன பெறுமதியிலிருந்து 25% ஆகும். ஏலம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் வாகனத்தை கொண்டு செல்வதற்கு 75% மீதிப்பணத்தை 2025 மார்ச் மாதம் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் பி.ப 4.00 மணி வரையில் கீழ்க்காணும் எமது வாகன வளாகத்தில் செலுத்த வேண்டும்.
- வாகன வளாகம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ. தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்.
- ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் லிமிடெட். தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்
- எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து நீக்குவதற்கான உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலம் விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

## ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம

ஒரு நாடு - ஒரு ஏல விற்பனையாளர்

133 வருட சேவைக்காலத்தின் கொண்டாட்டம்

CELEBRATING 133 Years TRUSTED SERVICE EXCELLENCE

www.sandslanka.com

**பிரதான காரியாலயம்.** - 24, டொரின்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 0812 227 593 பெக்ஸ் : 0812 224 371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

**நகர காரியாலயம்.** - 6A, பெயார்பீல்ட் கார்ட்ன்ஸ், கொழும்பு 08.
தொலைபேசி : 011 2 671 467, 2 671 468 பெக்ஸ் : 011 2 671 469
மின்னஞ்சல் : schokman@samera1892.com

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் பங்குனி மாதம் 04ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** காதல் திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

**ரிஷபம்** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**மிதுனம்** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவவிடுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சிம்மம்** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

**துலாம்** உடல் நலம் சீராக இருக்கும். நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள், உதவிகள் உண்டு.

**விருச்சிகம்** உங்கள் மதிப்பை நீங்களே கெடுத்துக்கொள்ளாதீர்கள். உணவு, உறக்கமின்றி சிரமப்படுவீர்கள்.

**தனுசு** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

**மகரம்** எதிர்கால வாழ்க்கைபற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**கும்பம்** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள்.

**மீனம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது. கோபத்தைக் குறைத்துக்கொண்டால் இலாபம் உண்டு.

| | |
|---|---|
| **திதி** | : சதுர்த்தி மு.இ.10.09 வரை பின் பஞ்சமி |
| **நட்சத்திரம்** | : சுவாதி பி.ப.5.51 வரை பின் விசாகம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : சித்த யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை- 8.15 – 9.15 மணி வரை பகல்- 12.15 – 1.15 மணி வரை மாலை-4.55–6.55 மணி வரை |
| **ராகு காலம்** | : 3.15 – 4.45 மணி வரை |
| **எமகண்டம்** | : 9.15–10.45 மணி வரை |
| **குளிகை** | :12.15 –1.45 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | :மீனராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று பிற்பகல் 5.51 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று பிற்பகல் 5.51மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி போன்ற நடசத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர்தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**விஷேட தினம்** :சங்கடஹர சதுர்த்தி, காரைக்கால் அம்மையார் குருபூசை.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# தேசிய வெசாக் தினத்தை இம்முறை மலையக தமிழர்களுடன் நுவரெலியாவில் கொண்டாடத் தீர்மானம்

## ரூ.12 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி

தேசிய வெசாக் தினத்தை இம்முறை மலையகத் தமிழர்களுடன் நுவரெலியாவில் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இதற்கு 12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்த புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் உண்மையான ஆணைக்குழுக்கள் எதிர்வரும் காலங்களில் நியமிக்கப்படுமெனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு மொத்தமாக 13,725 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் மாத்திரம் 26 திணைக்களங்கள், நிறுவனங்கள் உள்ளன.

புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள், கலாசார அலுவல்களுக்காக 4,175 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பௌத்த மத விவகாரங்கள் திணைக்களத்துக்கு 1,970 மில்லியன் ரூபா, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்துக்கு 210 மில்லியன் ரூபா, கிறிஸ்தவ மத விவகாரத் திணைக்களத்துக்கு 270 மில்லியன் ரூபா, இந்து மத விவகாரங்கள் திணைக்களத்துக்கு 300 மில்லியன் ரூபாவென ஒதுக்கப்பட்டுள்ளது.

பொது நம்பிக்கை நிதியத் திணைக்களத்துக்கு 135 மில்லியன் ரூபா, தொல்பொருள் திணைக் களத்துக்கு 2,520 மில்லியன் ரூபா, தேசிய அரும் பொருள் காட்சியக திணைக்களத்துக்கு 780 மில்லியன் ரூபா, கலாசாரத் திணைக்களத்துக்கு 1,600 மில்லியன் ரூபா, தேசிய சுவடிகள் திணைக்களத்துக்கு 1,765 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்து, பௌத்தம்,முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய மதங்களை ஒன்றிணைத்து இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பண்டிகைகளை தேசிய மட்டத்தில் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இனம் மற்றும் மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இந்த ஆண்டு இலங்கையர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இதற்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமானால் வேறுபாடுகள் களையப்பட வேண்டும்.



இம்முறை தேசிய வெசாக் தினத்தை மலையகத் தமிழர்களுடன் நுவரெலியாவில் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து அன்றைய தினம் விஷேட நிகழ்வுகளை நடத்தவுள்ளோம். இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் உண்மையான ஆணைக்குழுக்கள் எதிர்வரும் காலங்களில் நியமிக்கப்படும்''- என்றார்.

# தமிழரசுக் கட்சி கிளிநொச்சியில் வேட்புமனுத் தாக்கல்!



**பு.கஜிந்தன்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரு பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று (17) தாக்கல் செய்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தலைமையில் வடக்கு மாகாண மேனாள் கல்வியமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், மேனாள் தவிசாளர்களான அருணாசலம் வேழமாலிகிதன், சுப்பிரமணியம் சுரேன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினர்களின் பங்கேற்போடு இரு சபைகளுக்குமான வேட்புமனுக்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரியின் மகனுக்கு விளக்கமறியல்!

**பு.கஜிந்தன்**

யாழில் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரியின் மகன் நேற்று (17) நீதிமன்றத்தில் ஆஜராகிய நிலையில், 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வழக்கொன்றை இல்லாது செய்வதாகக் கூறி, யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவரின் மகன் 20 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றுள்ளார். இந்நிலையில், இலஞ்சம் வழங்கியவர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த வகையில், குறித்த பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அத்துடன், இலஞ்சம் பெற்ற நபரைக் கைதுசெய்யுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர் நேற்று (17) சட்டத்தரணியூடாக நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். இதன்போது குறித்த சந்தேகநபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மட்டு. தாந்தாமலை ஆலயத்தை புனரமைப்பதற்கு தடையாக செயற்படும் தொல்பொருள் திணைக்களம்



## ஸ்ரீநாத் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தாமலை ஆலயம் தமிழர்களின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கிறது. இந்த ஆலயத்தைப் புனரமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களமும் அரச நிகழ்ச்சி நிரலிலுள்ள நிறுவனங்களும் தடையாகச் செயற்படுவதாக தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஸ்ரீநாத் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,

''அனைத்து இனத்தவர்களையும் ஒன்றிணைத்து செயற்படவேண்டுமென்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய அரசாங்கம் பயணிக்கிறது. ஆனால், நடப்பு சம்பவங்கள் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு எதிர்மறையானதாக இருக்கின்றன.

சிறுபான்மை மக்களின் மனங்களைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. பாரம்பரியமான தொன்மையைக் கொண்டுள்ள இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் மற்றும் பௌத்தம் ஆகிய மதங்கள் சமனிலையான முறையில் பார்க்கப்பட வேண்டும். பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் அந்தஸ்து ஏனைய மதங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பண்டைய தொன்மையுடன் பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.இந்த ஆலயங்களை புனரமைக்க வேண்டிய பொறுப்பு புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சுக்கு உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தாமலை ஆலயம் தமிழர்களின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கிறது. இந்த ஆலயத்தைப் புனரமைப்பதற்கு தொல்பொருள் திணைக்களமும் அரச நிகழ்ச்சி நிரலில் உள்ள நிறுவனங்களும் தடையாக செயற்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், மண்டூர் முருகன் ஆலயம் உட்பட பல ஆலயங்கள் உள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கு கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்படவில்லை. அதேபோன்று, 500 - 600 ஆண்டுகால பழைமைவாய்ந்த தேவாலயங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளன. இவற்றை அபிவிருத்திசெய்ய கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்படவில்லை.

அண்மையில் ஹபரணை பகுதியிலுள்ள இந்து ஆலயத்தின் முகப்பை மறைக்கும் வகையில் பஸ் தரிப்பிட நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இது இந்துக்களின் மனங்களைப் பாதித்துள்ளது. இந்த அரசாங்கம் இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் மக்களின் மனங்களை வருத்தும் வகையில் செயற்படாதென்று கருதுகிறோம். இந்த முறையற்ற வகையில் செயற்பட்டவர்கள் யாரென்பதைக் குறிப்பிட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருந்தொகையாக குளங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆலயங்களைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும்''- என்றார்.

# சட்டவிரோத செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டு நாட்டின் கடல்வளம் நிச்சயம் பாதுகாக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



இலங்கையில் கடற்றொழில்துறை நவீனமயப்படுத்தப்படுமெனவும் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கை ஊக்குவிக்கப்படுமெனவும் சட்டவிரோத மீன்பிடிச செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டு எமது நாட்டின் கடல்வளம் பாதுகாக்கப்படுமெனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் ராஜாகுரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் மொஹமட் ஆலம், வடமாகாண கடற்றொழில் சங்கத்தினூடாக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர் அமைச்சரை யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் நேற்று (17) சந்தித்து பேச்சு நடத்தினர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலால் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், மீன்பிடி சட்டம் வரைபுத் திருத்தம், உள்ளூர் மீன்பிடியில் தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடி நடவடிக்கை என்பன தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு, இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடி மீன்பிடியை வெளிப்படுத்தும் ஆவணப் படத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் ஒப்படைப்பதற்காக அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் கூறியவை வருமாறு,

" இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஆவணப் படமொன்றைத் தயாரித்துள்ளனர். அதனை எனக்கு காண்பித்தனர்.

அதேபோல, இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதுபோல, உள்நாட்டிலுள்ள சிலரும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையைக் கடைப்பிடிக்கின்றனர். எனவே, இவற்றைத் தடுத்து நிறுத்தி எமது நாட்டின் கடல் வளம் நிச்சயம் பாதுகாக்கப்படும்.

அதேபோல், கடற்றொழிலை நவீனமயமாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். ஆழ்கடல் மீன்பிடிக்காக கப்பல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு வெளிநாடுகள் முன்வந்துள்ளன. அவற்றினூடாக ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிக்கப்படும்" - என்றார்.

# யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை வழங்கப்படாததாலேயே அநுராதபுர வைத்தியர் மீதான வன்புணர்வுச் சம்பவம் நிகழ்ந்தது

## யாழ். தீவக பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் ஹம்சிகா ராஜ்குமார்

**பு.கஜிந்தன்**

எமது நாட்டில் தமிழ் மக்களுக்கெதிராக இராணுவம் இழைத்த யுத்தக்குற்றச்சாட்டுகளுக்கு தண்டனை வழங்கப்படாத காரணத்தாலேயே பெண் வைத்தியரை முன்னாள் இராணுவச் சிப்பாய் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்க நேரிட்டதென யாழ். தீவக பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் ஹம்சிகா ராஜ்குமார் குற்றஞ்சாட்டினார்.

அநுராதபுரத்தில் முன்னாள் இராணுவச் சிப்பாயால் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட பெண் வைத்தியருக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென நேற்று திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட தீவக பெண்கள் வலையமைப்பின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், ''நாட்டில் புதிய அரசாங்கம் அதாவது, பெண் பிரதமர் பதவியேற்றதன் பின்னர் மகளிர் தின மகத்தான மாதத்தில் அநுராதபுரத்தில் முன்னாள் இராணுவச் சிப்பாயால் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை நாட்டின் ஒட்டுமொத்த பெண்களின் பாதுகாப்புக்கு சவால் விடுப்பதாகவும் நாட்டின் சட்டம் - ஒழுங்கை சவாலுக்குட்படுத்தும் விடயமாகவும் பார்க்கிறோம்.

ஒரு நாடு சமூக, பொருளாதார கலாசார ரீதியாக அபிவிருத்தியடைய வேண்டுமானால் அந்த நாட்டில் பெண்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நாட்டில் புதிய அரசாங்கமொன்று பதவியேற்றுள்ளது. பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென்ற மகிழ்ச்சியான நிலைப்பாடு தற்போது அநுராதபுரத்தில் பெண் வைத்தியர் பாலியல் வல்லுறவுக்கு ட்படுத்தப்பட்டமை மூலம் பெண்கள் மத்தியில் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச நீதியை தமிழ் மக்கள் கேட்டிருக்கின்ற நிலையில், குறித்த சம்பவத்தை சர்வதேசம் உற்றுநோக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

# ஹரக் கட்டா தப்பிக்க உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் நீதிமன்றில் முன்னிலை

ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன தப்பிச் செல்ல உதவியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று (17) மேல்நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

பின்னர், தொடர்புடைய குற்றச்சாட்டு தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கெதிராக குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்டது.

குற்றப்பத்திரிகைகளைப் பேணுவதற்கான திறன் குறித்து ஆரம்ப ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவுள்ளதாக அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

பின்னர் விசாரணை நடவடிக்கைகளை ஏப்ரல் 4 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கின் மற்றொரு பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள நதுன் சிந்தக விக்ரமரத்ன என்ற ஹரக் கட்டா, விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டுமென்றும் அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

# ஒப்புக்கொண்டவை மீறப்பட்டதால் தொழிற்சங்க நடவடிக்கை

## கிண்ணியா தள வைத்தியசாலை தாதியர்கள் தெரிவிப்பு







**(சீனக்குடா, தம்பலகாமம், மூதூர் செய்தியாளர்கள்)**

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் நேற்று (17), 03 மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அதேவேளை, மதிய நேரத்தில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

காலை 10 மணிமுதல் ஆரம்பமான இவர்களின் பணிப்புறக்கணிப்பு, மதியம் ஒரு மணி வரை நீடித்தது. இதனால் அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரிவுகளும் அன்றாட செயற்பாட்டை இழந்திருந்தன.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காகச் சென்ற நோயாளிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். 2025 வரவு - செலவுத் திட்டத்தில் தாதியர் சேவைக்கு இழைக்கப்பட்ட அநீதி சரிசெய்யப்படாததால் இவ்வாறான பணிப்புறக்கணிப்புக்கு தாங்கள் ஆளாக்கப்பட்டிருப்பதாக தாதியர்கள் இதன்போது தெரிவித்தனர்.

மேலும், ஒப்புக்கொண்டபடி தாதியர் சேவையில் பதவியுயர்வுப் பிரச்சினை குறித்து எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையெனவும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் 1/200 மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகள் 1/30 ஆக மாற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட யோசனை தொடர்பாக நிதி அமைச்சகத்துடனான பேச்சுவார்த்தை ஒப்புக்கொண்டபடி நடக்கவில்லையெனவும் இதன் காரணமாக தாதியர் சேவை கடுமையாக அதிருப்தியடைந்துள்ளதெனவும் தாதியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மூதூர் தள வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களும் நேற்று திங்கட்கிழமை (17) பகல் 12.00 மணியளவில் வைத்தியசாலை வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தாதியர் சேவைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தீர்வு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்து இவ் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட தாதிய உத்தியோகத்தர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். இப் போராட்டத்தில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத் தலைவர் எம்.எம்.பைஸாத் சம்பள அதிகரிப்பு ஏற்பட்டாலும் தமது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லையென ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு ஆர்வத்துடன் தோற்றிய மாணவர்கள்







**(ஆலையடிவேம்பு, தம்பலகாமம், தோப்பூர் செய்தியாளர்கள்)**

அம்பாறை மாவட்டத்திலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நேற்று(17) ஆரம்பமானதுடன் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் மிகவும் ஆர்வத்துடன் பரீட்சை நிலையங்களுக்கு சென்றிருந்ததைக் காணமுடிந்தது.

திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட மூன்று கல்விக் கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 08 பரீட்சை நிலையங்களில் பரீட்சை ஆரம்பித்ததுடன் 846 பாடசாலை மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாக திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.கமலமோகனதாசன் தெரிவித்தார்.

மாணவர்கள் இறை வழிபாட்டின் பின்னர் ஆர்வத்துடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அக்கரைப்பற்று இராமகிருஸ்ணா தேசிய பாடசாலையிலும் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களுக்கு சென்றிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமாரின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் பரீட்சை நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிண்ணியா வலயக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள அல்-அக்ஸா கல்லூரியில் பரீட்சைக்காக மாணவர்கள் தோற்றியதையும் அவதானிக்க முடிந்தது.

மேலும், தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியின் பரீட்சை மண்டபத்துக்கும் மாணவர்கள் ஆர்வத்துடன் சமுகமளித்ததை அவதானிக்க முடிந்தது.

# காத்தான்குடியில் 4,000 போதைமாத்திரைகளுடன் வர்த்தகரொருவர் கைது



**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

சுமார் நான்காயிரம் போதை மாத்திரைகளுடன் வர்த்தகரொருவரை காத்தான்குடி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை(16) இரவு கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஐ.ரத்னாயக்க தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேயனோடை பத்ர்பள்ளி வீதியில் உள்ள வீட்டில் வைத்தே குறித்த போதை மாத்திரைகளை சந்தேக நபர் விற்பனை செய்து வந்துள்ளார்.

35 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான ஒருவரையே இவ்வாறு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து சுமார் 04 இலட்சம் ரூபா பெறுமதியான 04ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலிரத்னவின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி ரத்னாயக்கவின் தலைமையில் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதலின்போதே இப்போதை மாத்திரைகளுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத் தப்பட விருந்ததாகவும் மேலதிக விசாரணை களை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.




**தபால் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியிலுள்ள தபால் ஊழியர்கள் 48 மணித்தியால அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

**அந்த வகையில் திருகோணமலை, தோப்பூர் தபால் அலுவலக ஊழியர்களும் நேற்று திங்கட்கிழமை (17) அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, தோப்பூர் தபால் அலுவலகம் மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தபால் அலுவலகத்துக்கு சேவை பெறச் சென்றோர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகக் கவலை தெரிவித்தனர். (மூதூர் செய்தியாளர்)**



**சாய்ந்தமருது மல்ஹருஸ் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வு அதிபர் றிப்கா அன்சார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ரமழான் சிந்தனையையும் அண்மையில் காலமான பாடசாலை ஆசிரியர் எம்.பி.எம். ரியாத்துக்கான துஆ பிரார்த்தனையையும் மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பேஷ்இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்முனை கல்வி வலய பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் கலந்து கொண்டிருந்ததுடன் கல்முனை கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் எம்.எச்.ஜாபிர், யூ.எல்.எம்.சாஜித், ஏ.சஞ்சீவன், எம்.எல்.எம். முதர்ரிஸ், சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் அஸ்மா அப்துல் மலிக், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.என்.அப்துல் மலிக், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# தமிழரசுக் கட்சி உறுப்பினர் காண்டீபன் தேசிய மக்கள் சக்தியில் இணைவு

**(மட்டக்களப்பு செய்தியாளர்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எருவில் வட்டாரக் கிளையின் தலைவராக இருந்து செயற்பட்டு அக்கட்சியிலேயே கடந்த உள்ளூராட்சி மன்றத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் உறுப்பினராக செயற்பட்ட சிவப்பிரகாசம் காண்டீபன் தற்போது அக்கட்சியிலிருந்து வெளியேறி தேசிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

அவரது இச்செயற்பாடு தொடர்பில் நாம் தொடர்பு கொண்டு வினவியபோது,

''இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எருவில் வட்டாரக் கிளையின் தலைவராக நான் செயற்பட்டு அக்கட்சியிலே கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சிறந்த முறையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக செயற்பட்டிருந்தேன்.

ஆனால், அக்கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர் பதவியில் இருக்கும் சிலர் எனக்குத் தெரியாமலேயே எனது வட்டாரத்தில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். இந்நிலையில், 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதும் அதற்கு நான் விண்ணப்பித்திருந்தேன். அப்போதும் எனது விண்ணப்பம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் போக்கு அண்மைக்காலமாக தன்னிச்சையாக உள்ளது. இந்நிலையில்தான் நான் அக்கட்சியிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறி தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளேன். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி எருவில் வட்டாரத்தில் போட்டியிடவுள்ளேன்'' என்றார்.



# இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியத்தின் Top 100 விருது வழங்கலில் பல்துறை சார்ந்தோர் கௌரவிப்பு





**(குருக்கள்மடம் செய்தியாளர்)**

இலங்கை - இந்திய நட்புறவு ஒன்றியத்தின் Top 100 விருது வழங்கும் விழா, ஒன்றியத் தலைவர் உமா தீபன் தலைமையில் கண்டி, சம்பத் மண்டபத்தில் சனிக்கிழமை(15) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகத்துறை சார்ந்து கல்முனை தமிழர் கலாசாரப் பேரவையின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ச.தவபாலன் 'சிறந்த சமூக சேவையாளர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடக வியலாளரு மான உ.உதயகாந்த் 'சாதனைத் தமிழன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, மட்டக்களப்பில் தொழில்துறை யில் சாதனை படைத்துவரும் சிறந்த தொழில் முனைவர் த.ஜெபி ஜெனார்த், இலக்கிய துறை சார்ந்து திருமதி ஜாயிதா ஜலால்தீன், சமூக சேவை துறை சார்ந்து எஸ்.ரமணதாஸ், எஸ்.கமலேஸ்வரராஜா, கே.குணநாயகம், எஸ்.சரவணபவன், இரும்பரசன் இராஜரெட்ணம், தரணீஸ்வரம் ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையிலும் ஆர்ப்பாட்டம்



**(குருக்கள்மடம் செய்தியாளர்)**

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியாசலையில் பணிபுரிகின்ற தாதிய உத்தியோகத்தர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளை ஏந்தியவாறு நேற்று திங்கட்கிழமை(17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

''தாதியர்களுக்கு வரவு - செலவுத்திட்டத்தில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் மேலதிக கொடுப்பனவு குறைக்கப்பட்டது ஏன்?'' உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு வைத்தியசாலையின் நிர்வாக சேவைகளுக்கும் வைத்தியசேவைகளுக்கும் எதுவித பாதிப்புகளும் ஏற்படாதவாறு தாதிய உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் செயலாளர் ஏ.ஜி.எம்.நகூஹான், அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திருமதி வ.புவிதர் உள்ளிட்ட தாதியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# நான்கு சபைகளில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது ஜனநாயக தேசிய கூட்டணி



(சி.திவியா)

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தேசிய கூட்டணி வவுனியா மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் நேற்று (17) கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை 19ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்தமுடியுமென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை,வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் குறித்த கூட்டணி போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை சிறிதமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ப.உதயராசா தலைமையிலான குழுவினர் செலுத்தியிருந்தனர்.

# வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்







(சி.திவியா)

இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தாதியர்களின் பதவி உயர்வில் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியும் நாடளாவிய ரீதியிலுள்ள பெரும்பாலான அரச வைத்தியசாலைகளில் நேற்று பகல் 10.00 மணிமுதல் 1.00 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் 12.00 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது.

அந்த வகையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாகவும் தாதியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாதியர்கள், எங்களது மேலதிக நேரக் கொடுப்பனவு 1/80 என்று கூறிய மதவத்த எங்கே?, அமைச்சரே 2027 ஆம் ஆண்டு சம்பளத்தில் கணக்கிடுவதென்று பொய்சொல்ல வேண்டாம், பழைய முறையில் பதவியுயர்வு என்றால் வரவு - செலவுத்திட்டத்தில் போட்டது ஏன், அரசே, தாதியருக்கு வரவு - செலவுத் திட்டத்தில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்தது சுகாதார ஊழியர்களைத் தாக்கவா?'' - போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் தாதியர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் தாதியர்கள் காலை 10.00 மணிமுதல் 1.00 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவசர நோயாளர் பிரிவு, விபத்துப்பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு உட்பட்ட சில சேவைகளில் மட்டுப்படுப்பட்ட தாதியர்கள் சேவைகளில் ஈடுபட்டிருந்தமையுடன் ஏனைய சேவைகளிலிருந்து 03 மணிநேரம் தாதியர்கள் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் அயல்வீட்டாரை அச்சுறுத்தும் நபர் யாழில் கைது!

(பு.கஜிந்தன்)

யாழ். வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நபரொருவர் தினமும் மதுபோதையில் அயல் வீட்டாரை அச்சுறுத்தி வருவதாக பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்ததையடுத்து சந்தேக நபர் நேற்று (17) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வீட்டுக்கு தினமும் மதுபோதையில் வந்து பெண் பிள்ளைகள் இருக்கும் அயல் வீட்டாரை தகாத வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தி வருகின்றார்.

மதுபோதையில் தினமும் அயல் வீட்டாரை அச்சுறுத்தி அநாகரிக செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர் ஈடுபடுவதால் உயிருக்குப் பயந்து பாதிக்கப்பட்ட பெண் நடவடிக்கை எடுக்குமாறு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இதனையடுத்து நேற்று (17) சந்தேகநபர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன இரு மீனவர்கள்

## தேடும் பணிகள் தீவிரம்

(பு.கஜிந்தன்)

யாழிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோமஸ் டக்ளஸின் படகில் இரண்டு மீனவர்கள் கடந்த சனிக்கிழமை (15) மாலை 3.00 மணிக்கு ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்கு தளத்திலிருந்து IDAY-A-0035 JFN நீலம் மற்றும் வெள்ளை நிற படகில் மீன்பிடிக்கச் சென்றனர்.

ஆனால், அவர்களில் எவரும் இன்னும் கரைக்குத் திரும்பவில்லையென யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

காணாமல்போன மீனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# போலி தங்கத்தை விற்க முயன்ற மூவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

தொல்பொருள் பெறுமதிமிக்க புராதன காலத்து தங்கமுலாம் பூசப்பட்ட போலியான தங்கத்தை தங்கமெனக்கூறி பத்து இலட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த சந்தேக நபர்கள் மூவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கெக்கிராவ பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கெக்கிராவ பொலிஸ் பிரிவின் பஸ்தரிப்பு நிலையத்துக்கருகில் நேற்று முன்தினம் (16) மாலை நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளதுடன், தங்க முலாம் பூசப்பட்ட ஒரு தொகை போலி தங்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 35, 42, 51 வயதுடைய கெக்கிராவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராண்ட்பாஸ் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு சகோதரர்கள் இருவர் கொலை

## சந்தேகநபர்கள் எண்மர் கைது

கிராண்ட்பாஸ், ஜபோஸ்லேன் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (15) கூரிய ஆயுதத்தால் தாக்கிச் சகோதரர்கள் இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 08 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் எண்மரும் நேற்று முன்தினம் (16) இரவு வெல்லம்பிட்டி பகுதியில் கைதுசெய்யப்பட்டதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வெல்லம்பிட்டி பகுதியில் வசிக்கும் 16 முதல் 44 வயதுக்குட்பட்டவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டபோது, குற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு கத்திகள் மற்றும் ஒரு கைபேசியையும் கைப்பற்றியுள்ளனர்.

கிராண்ட்பாஸின் வெஹெரகொடெல்ல பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட வன்முறை மோதலின் விளைவாக 23 மற்றும் 24 வயதுகளைக் கொண்ட பாலத்துறை – நவலோகபுர பகுதியைச் சேர்ந்த சகோதரர்கள் உயிரிழந்தனர்.

மோதலின்போது, கூரிய ஆயுதத் தாக்குதல்களால் இரண்டு நபர்கள் பலத்த காயமடைந்தனர். பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் உயிரிழந்ததாகப் பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

சம்பவம் குறித்து கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் மூன்று சபைகளிலும் போட்டியிட கட்டுப்பணம் செலுத்திய மக்கள் போராட்ட முன்னணி

வவுனியா மாநகரசபை உள்ளிட்ட மூன்று சபைகளிலும் போட்டியிட மக்கள் போராட்ட முன்னணி நேற்று (17) வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் நாளை 19ஆம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, சிங்கள பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் குறித்த முன்னணி போட்டியிடவுள்ளது.

அதற்கான கட்டுப்பணத்தை அந்த அமைப்பின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர் என்.பிரதீபன் மற்றும் காமினி உட்பட்ட முக்கியஸ்தர்கள் செலுத்தியிருந்தனர்.

# கெச்சிமலை தர்காவில் இப்தார் நிகழ்வு







(பீ.எம்.முக்தார்)

பேருவளைப் பகுதியில் சமூகங்களுக்கிடையிலான உறவைக் கட்டியெழுப்பும் நோக்குடன் களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் இப்தார் நிகழ்வு கெச்சிமலை தர்காவில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

மாவட்ட சம்மேளனத் தலைவர் எம்.எச்.எம். உவைன் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இந்த இன நல்லுறவு இப்தார் நிகழ்வில் பௌத்த, கத்தோலிக்க சமயப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சர்வமதத் தலைவர்கள், அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பேருவளை மொல்லியமலை அபிநவராம பௌத்த விஹாரையின் அதிபதி ஹெடிகல்லே விமலசார தேரர், கண்டி கட்டுக்கலை பள்ளிவாசல் இமாம் மௌலவி ஏ.ஏ.எம். அஸ்லம், பேருவளை பிரதேச செயலாளர் ஜானக பெரேரா, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஆர்.நவரத்ன ஆகியோர் இங்கு சமூகங்களுக்கிடையிலான உறவு களைக் கட்டியெழுப்புவதன் அவசியம் குறித்து வலியுறுத்தி உரையாற்றினர்.

பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் அரூஸ் அஸாத், பேருவளை திடீர் மரண விசாரணை அதிகாரி முஹம்மத் நஸ்ரீன், மாவட்ட அஹதிய்யா சம்மேளன செயலாளர் முஹம்மத் ஹிஷாம் உட்பட உறுப்பினர்கள் பலரும் பங்கு பற்றினர்.

# ரயிலில் மோதி ஒருவர் பலி

கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுணுப்பிட்டி ரயில் கடவையில் நேற்று முன்தினம் (16) காலை ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிரிபத்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மிதிகம பகுதியில் துப்பாக்கிச்சூடு

மிதிகம, பத்தேகம பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று (17) அதிகாலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூடு காரணமாக வீட்டின் முன் ஜன்னல் மற்றும் சுவரில் தோட்டாக்கள் பாய்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்பவத்துக்கான காரணம் மற்றும் சந்தேக நபர்கள் குறித்து எவ்வித தகவலும் இதுவரை தெரியவரவில்லை.

சம்பவம் தொடர்பில் மிதிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (17.03.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 183.2161 | 192.5011 |
| கனேடியன் டொலர் | 202.0117 | 210.6807 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.5969 | 42.1728 |
| யூரோ | 316.5248 | 329.2966 |
| ஜப்பான் யென் | 1.9592 | 2.0356 |
| சிங்கப்பூர் டொலர் | 217.6677 | 227.4547 |
| ஸ்ரேலிங் பவுன் | 376.8468 | 391.0095 |
| சுவிஸ் பிராங் | 327.9324 | 343.2319 |
| ஐ.அ. டொலர் | 292.5401 | 300.9558 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 784.7299 |
| குவைட் | குவைட் தினார் | 960.2097 |
| ஓமான் | ஓமான் றியால் | 768.3024 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.1510 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.8726 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.5434 |

# ஹல்துமுல்ல நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 51 குடும்பங்களுக்கு நிலத்துடன் புதிய வீடுகள்





இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹல்துமுல்ல நிலச்சவால் பாதிக்கப்பட்ட 51 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தலா பத்து பேர்ச்சஸ் காணிப் பகுதிகளுடன் புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளன.

நிலச்சரிவால் இருப்பிடங்களை இழந்து இரண்டு ஆண்டுகளாக பூனாகலை மஹாகந்த தேயிலைத் தொழிற்சாலையில் வசித்து வந்த 51 குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் (16) ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் பூனாகலை கபரகலை பிரிவில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர், ஊவா மாகாண ஆளுநர், இராணுவத் தளபதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஹல்துமுல்ல நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இந்த 51 குடும்பங்களுக்கே நிரந்தர வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தலா பத்து பேர்ச்சஸ் காணிப் பகுதிகளுடன் புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பத்து பேர்ச்சஸ் காணிப் பகுதியுடன் ரூ. 28 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடுகள் கட்டப்படவுள்ளதுடன், 51 வீடுகளும் கட்டும் திட்டத்துக்கான நிதிச் செலவை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு ஏற்கவுள்ளது. மேலும் இலங்கை இராணுவத்தின் பங்களிப்புடன் இது கட்டப்படவுள்ளது.

வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, ''இந்த வீடுகளைக் கட்டுவதற்கான பணம் தன்னுடைய அல்லது வேறு யாருடைய தனிப்பட்ட பணமல்ல என்றும் இது பொதுமக்களின் வரிப்பணமென்றும் அதனால் தனக்கும் தனது குழுவினருக்கும் போடப்பட்ட மாலைகள் தமக்கோ அல்லது தமது குழுவினருக்கோ போடப்பட வேண்டியதில்லையெனவும் கூறினார்.

புதிய அரசாங்கம் பாரம்பரிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் பதவிக்கு வந்துள்ளதால், மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்களின் பிரச்சினைகளில் தலையிடுவது அவசியம். கடந்த காலத்தில் மக்கள் பிரதிநிதிகள் வேலை செய்யவில்லையென்று நான் கூறவில்லை. ஆனால், முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டியதைச் செய்யாததால் ஏற்பட்ட தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வோம்.

எமது அரசாங்கத்துக்கு வாய்ப்புக் கிடைத்தவுடன் அநாதைகள் முகாம்களிலிருந்து வெளியேற்றி புதிய வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல், 2014 ஆம் ஆண்டு முதல் சமசர நிலச்சரிவுக் காரணமாக அநாதைகள் முகாம்களிலுள்ள 22 குடும்பங்களுக்கும் விரைவில் வீடுகள் கட்டித் தரப்படும்''- என்றார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், ''மக்களுக்கு இவ்வாறு நேர்ந்தாலும் ஆட்சியாளர்களுக்கு அப்படி நடக்கவில்லை. வீடுகள் தீக்கிரையான பிறகு மாதக்கணக்கில் கோடிக்கணக்கில் நஷ்ட ஈடு பெற்றனர். இப்போது இந்த வீட்டுத் திட்டம் நாட்டு மக்களின் வரிப்பணத்தில் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சு இந்த வீடுகளுக்காக ரூ. 1800 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. ஆனால், கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வீடுகளுக்கு ஒரு வீட்டுக்கு சுமார் ரூ. 1,300 இலட்சம் செலவு செய்ததாக அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் சட்டத்தரணி கபில ஜயசேகர, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்க பிரதீப் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி,மேலதிக செயலாளர்கள், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், பதுளை மாவட்ட மேலதிக செயலாளர், ஹல்துமுல்ல பிரதேச செயலாளர், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் மற்றும் புதிய வீட்டுப் பயனாளிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.




**மருதானை அல் - ஹிதாயா கல்லூரியின் பழைய மாணவர்கள் 41ஆவது வருடமாக இப்தார் நிகழ்வை கல்லூரியின் மைதானத்தில் பழைய மாணவர்கள் சங்கத்தின் தலைவர் ஹம்தாஜ் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் உட்பட மற்றும் கொழும்பு வாழ் தமிழ், முஸ்லிம் பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன், கல்லூரியின் திருத்த வேலைகள் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை போன்ற புனர்நிர்மாணத்துக்கு பழைய மாணவர்கள் நிதி அன்பளிப்பு வசதிகளையும் மேற்கொண்டனர்.**

**படம்:** *அஷ்ரப் ஏ சமத்*

# சீனன்கோட்டை பாஸிய்யா பெரியபள்ளிவாசலில் வருடாந்த புர்தா தமாம் மஜ்லிஸ்






*பேருவளை பீ.எம் முக்தார்*

சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் வருடாந்த புர்தா தமாம் மஜ்லிஸ் சிறப்பாக நடைபெற்றது.

மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ரயீஸுல் முகத்தனஷ் இக்ராம் (அல்-பாஸி) புர்தாவின் மகிமை பற்றியும் அதை இயற்றிய இமாம் பூஸரியின் (ரஹ்) வாழ்க்கை வரலாறு பற்றியும் தமது சொற்பொழிவில் எடுத்துக் கூறினார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் புர்தா கமிட்டி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

அஸர் தொழுகையின் பின்னர் புர்தா மஜ்லிஸ் ஆரம்பமானதுடன் மஃரிப் தொழுகையின் பின்னர் வலீபா யாக்கூத்தியாவும் அதனையடுத்து ஹழரா (திக்ர்) மஜ்லிஸும் இடம் பெற்றன. இஷாத் தொழுகையின் பின்னர் மார்க்கச் சொற்பொழிவு இடம்பெற்றது.

நிகழ்வில் ஸதாத்மார்கள், கலீபாக்கள், உலமாக்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், புர்தா கமிட்டி உறுப்பினர்கள் பெருமளவிலான இஹ்வான்கள் பங்குபற்றினர்.

சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் நீண்ட காலமாக புர்தா மஜ்லிஸ் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிக்கவரெட்டிய பஸ் விபத்தில் 21 பேர் காயம்



நிக்கவரெட்டியவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் ஒன்று நேற்று (17) காலை ஆராச்சிகட்டுவ பொலிஸ் பிரிவின் பத்துலுஓயா பகுதியில் விபத்துக்குள்ளானது.

பஸ் வீதியை விட்டு விலகி மரம், கடை மற்றும் வீடு மீது மோதியதில் 21 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த விபத்தில் வீட்டினுள்ளே உறங்கிக்கொண்டிருந்த ஒரு குழந்தை, மீது அலுமாரி விழுந்ததில் குழந்தை காயமடைந்துள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சிலாபம் மற்றும் முந்தலம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து ஆராச்சிகட்டுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ரஷ்யப் பிரஜையின் காணாமல்போன பயணப்பொதியை மீட்டுக்கொடுத்த பொலிஸார்

*அநுராதபுரம் நிருபர்*



ரஷ்யா நாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு அநுராதபுரம் பகுதிக்குச் சென்றிருந்த வெளிநாட்டுப் பிரஜையொருவரது காணாமல்போன பயணப் பொதியைத் தேடி உரியவரிடம் வழங்குவதற்கு அநுராதபுரம் சுற்றுலா பொலிஸ் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து தனியார் பஸ் ஒன்றில் அநுராதபுரம் சென்றபோது தனது பயணப் பொதி காணாமல் போயுள்ளதாக ரஷ்யா நாட்டுப் பிரஜையொருவர் அநுராதபுரம் சுற்றுலா பொலிஸ் பிரிவில் கடந்த 14ஆம் திகதி முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளார்.

இதனையடுத்து பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்ட சுற்றுலாப் பொலிஸார் கொழும்பு பஸ் தரிப்பு நிலையத்தில் வினவியபோது கொழும்பு - வவுனியா பஸ்ஸில் பயணப் பொதியொன்று இருப்பதாகக் கூறியதையடுத்து அது அதே பஸ்ஸில் அநுராதபுரத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

அப்பயணப்பொதி அவருடையது தானா என உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அநுராதபுரம் வலயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலின ஹேவா பத்திரனவால் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் வைத்து உரிய வெளிநாட்டுப் பிரஜையிடம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அலுவலகத்துக்கு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனம்

*அஷ்ரப் ஏ சமத்*



தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அலுவலகத்துக்கு புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வகையில் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார அண்மையில் நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தார்.

அதற்கமைவாக தலைவர் விஜித் ரோஹன பெர்னாண்டோ, உறுப்பினர்களாக ஓமரே தேரர், அருட்தந்தை கிரேசியன் கேப்ரியல், அன்டோனிட்டோ அருள் ராஜ், பேராசி ரியர் வசந்த செனவிரத்ன, பேராசிரியை பரீனா ருசைக், கலாநிதி மனோஜி ஹரிச்சந்திர, சுசித் அபேவிக்கிரம, மற்றும் ஹாசீம் சாலி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பாராளுமன்றத்தைப் பார்வையிடச் சென்ற மாணவர்களுடன் சபாநாயகர் சிநேகபூர்வ சந்திப்பு




இலங்கை பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு அண்மையில் (12) சென்றிருந்த பாடசாலை மாணவர்கள், சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை சந்தித்து சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதில் பொலன்னறுவை கல்அமுன மகாவித்தியாலயம், மெதிரிகிரிய தேசிய பாடசாலை மற்றும் மொனராகலை மஹாநாம வித்தியாலயம் என்பவற்றின் மாணவ மாணவியர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவ மாணவியருடன் சிநேகபூர்வமாக உரையாடிய சபாநாயகர், இலங்கை பாராளுமன்றத்தின் சட்டரீதியான செயன்முறைகள் தொடர்பில் மாணவர்களை அறிவுறுத்தினார்.

பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாராளுமன்றத்தின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் காணப்படும் சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தவும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வது தொடர்பிலும் தான் கவனஞ்செலுத்தியுள்ளதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன பொலன்னறுவை கல்அமுன மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209





## ரஷ்யா – உக்ரைன் போருக்கு முடிவு:

# ட்ரம்ப் - புட்டின் இன்று பேச்சு

ரஷ்யா – உக்ரைன் போரை நிறுத்துவது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் இன்று (18) கலந்துரையாடவுள்ளதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி மேலும் கூடுதல் இறக்குமதி வரி விதிப்பது உறுதி என்றும், அன்றுதான் அமெரிக்கா சுதந்திரம் பெறும் நாள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் இன்று (18) பேசவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா இடையே கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வரும்நிலையில், இப்போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் இடம்பெற்றாலும் ரஷ்யா – உக்ரைன் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகின்றன. போர்நிறுத்தத்துக்கு அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது.

முன்னதாக சவூதியில் இடம்பெற்ற அமைதி பேச்சுவார்த்தையில் அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய இரு தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தப் பேச்சுவார்த்தைக்கு பின்னர் 30 நாட்கள் போர்நிறுத்தத்துக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து அமெரிக்க வெள்ளை மாளிகையின் சிறப்புத் தூதுவர் ஸ்டீவ் விட்காப் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்குச் சென்று அந்நாட்டு ஜனாதிபதி புட்டினை சந்தித்துப் பேசினார். போர்நிறுத்தம் தொடர்பாக புட்டின் கூறும்போது சில பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இதையடுத்து கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பல விடயங்கள் நடந்துள்ளதாக நிருபர்களிடம் பேசிய ட்ரம்ப் தகவல் தெரிவித்துள்ளார்.



# உடல்நலம் தேறிய பாப்பரசர் பிரான்சிஸ்



பாப்பரசர் பிரான்சிஸ் உடல்நலம் பெறவேண்டி உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், பாப்பரசர் பிரான்சிஸ், பலிபீடத்தின்முன் அமர்ந்திருக்கும் புதிய புகைப்படத்தை வத்திக்கான் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

ஜெமெலி மருத்துவமனையில் சக பாதியார்களுடன் அவர் திருப்பலியில் கலந்துகொண்டதாகவும், அவரின் உடல்நிலை தற்போது முன்னேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகைப்படம் பின்னால் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதில், பாப்பரசர் பிரான்சிஸ் ஊதா நிற சட்டை அணிந்தபடி பலிபீடத்தின் முன் சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பதைக் காட்டுகிறது. பெப்ரவரி 14ஆம் திகதி மருத்துவமனையில் போப் அனுமதிக்கப்பட்ட பின்னர் வெளியான முதல் புகைப்படம் இதுவாகும்.

போப் பிரான்சிஸ் (வயது 88) மூச்சுக் குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்தாலி தலைநகர் ரோமிலுள்ள ஜெமெலி மருத்துவமனையில் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 9 மாதங்களுக்குப் பின் பூமி திரும்பும் சுனிதா

## இறுதிக்கட்ட ஏற்பாடுகள் இன்று ஆரம்பம்




நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமி திரும்புவதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் இன்று (18) காலை 8.15 மணி முதல் ஆரம்பமாகவுள்ளதென நாசா தெரிவித்துள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து விண்கலத்தை Undock செய்யும் அணிகள் (இந்திய நேரப்படி) இன்று (18) காலை 10.15 மணிக்கும் ஆரம்பமாகிறது. அதன்படி நாளை (19) அதிகாலை 2.15 மணியளவில் Deorbit பணிகள் நிறைவுபெற்று தரையிறக்கம் செய்யப்படும் பூமி திரும்பும் நிகழ்வு தொடர்ச்சியாக வானிலை சூழலைப் பொறுத்து வரையறுக்கப்படுமென நாசா தெரிவித்துள்ளது.

### 9 மாதங்களுக்குப் பின்னர் பூமிக்குத் திரும்பும் சுனிதா

இதன்படி ஒன்பது மாதங்களாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கியிருக்கும் விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் நாளை பூமிக்கும் திரும்பவுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் நாளை பூமிக்குத் திரும்புவரென்று எதிர்பார்க்கப்பட்டாலும், அவர்கள் புறப்பட்டு பூமியை அடைய நாளைமறுதினம் (20) கூட ஆகலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.




சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 9 மாதங்களாக சிக்கியுள்ள நாசா விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ், மற்றொரு விண்வெளி வீரரான வில்மோர் ஆகியோரை பூமிக்குத் திரும்ப அழைத்து வர அனுப்பப்பட்ட ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலன் வெற்றிகரமாக ஞாயிற்றுக்கிழமை சென்றடைந்தது.

இந்த டிராகன் விண்கலத்தில் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றுள்ள அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்களுக்கு சில பயிற்சிகளை அளித்த பின்னர், சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் ஆகியோருடன் மேலும் 2 விண்வெளி வீரர்கள் நாளை பூமி திரும்பவுள்ளனர்.

### உடல்நிலை சீராக ஓராண்டாகும்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 9 மாதங்களுக்கு மேலாக தங்கியிருக்கும் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் இதர வீரர்கள் பூமிக்குத் திரும்பியதும் அவர்களுக்கு பல்வேறு உடல்நலக் குறைவுகள் ஏற்படும்.

விண்வெளியில் தங்கியிருந்ததால் அவர்களின் எலும்புகள், தசைநார்கள் பலவீனமடைந்திருக்கும். அவர்களின் தோல், குழந்தைகளின் தோல் போன்று மிகவும் மென்மையாக மாறியிருக்கும். கண்பார்வை திறன் பாதிக்கப்பட்டிருக்கும். கதிரியக்க பாதிப்பு காரணமாக செல்கள், இரத்த அணுக்களும் பாதிக்கப்பட்டிருக்கும்.

பூமிக்குத் திரும்பியதும் அவர்களுக்கு தலைவலி, தலைசுற்றல், வாந்தி ஏற்படும். எலும்பு, தசைநார்கள் பலவீனமடைந்திருப்பதால் அவர்களால் தரையில் காலூன்றி நடக்க முடியாது. சுமார் 3 மாதங்கள் முதல் ஓராண்டுக்குப் பிறகே சுனிதா உள்ளிட்டோர் இயல்புநிலைக்குத் திரும்புவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சுனிதாவின் சம்பளம் எவ்வளவு தெரியுமா?

நாசாவின் சம்பளப் பட்டியலில் ஜிஎஸ்-15 கிரேடில் சுனிதா வில்லியம்ஸ் உள்ளார். இதன்படி அவருக்கு ஓராண்டில் ரூ.1.41 கோடி (இந்திய ரூபாபடி) சம்பளம் வழங்கப்படுகிறது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் 9 மாதங்கள் தங்கிருந்ததற்காக ரூ.1.05 கோடி, இதர படிகள் வகையில் ரூ.1.06 கோடி அவருக்குக் கிடைக்கும் என்று நாசா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், நாளை (19) அல்லது நாளைமறுதினம் (20) சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விடுவிக்கப்படும் டிராகன் விண்கலன், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தையொட்டி கடல் பகுதிக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### எப்போது சென்றார்?

அமெரிக்காவின் போயிங் நிறுவனம் உருவாக்கிய ஸ்டார்லைனர் விண்கலம், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் சர்வதேச விண்வெளி நிலையத்தை கடந்த 2024ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி அடைந்தது.

ஒன்பது நாட்களுக்குப் பின்னர் ஸ்டார்லைனர் மூலமே அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவதாக இருந்தது. இருந்தாலும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர்களால் திட்டமிட்டபடி பூமி திரும்ப முடியவில்லை. இதன் காரணமாக, அவர்கள் இருவரும் கடந்த 9 மாதங்களாக சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே சிக்கியிருந்தனர்.

## டாஸ்மாக் ஊழலை எதிர்த்துப் போராட்டம்:

# தமிழிசை - அண்ணாமலை உள்ளிட்ட தமிழக பா.ஜ.க. பிரமுகர்கள் கைது!











சென்னையில் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் ரூ.1000 கோடி ஊழல் தொடர்பாக முற்றுகை போராட்டம் அறிவித்திருந்த நிலையில், பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட பலரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் அரசு மதுக்கடைகளை நடத்தும் டாஸ்மாக் நிறுவனத்திலும் மது ஆலைகளிலும் நடத்தப்பட்ட சோதனைகளில் ரூ.1,000 கோடி அளவுக்கு ஊழல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அமுலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

அது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும், மதுவிலக்கு துறையின் இன்றைய அமைச்சர் செந்தில்பாலாஜி, முன்னாள் அமைச்சர் சு. முத்துசாமி ஆகியோரை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

இந்நிலையில், ரூ.1,000 கோடி டாஸ்மாக் ஊழலைக் கண்டித்து, தமிழக பா.ஜ.க. சார்பில் நேற்று (17) சென்னை டாஸ்மாக் தலைமை அலுவலக முற்றுகைப் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. பா.ஜ.கவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் நேற்றுக் காலை முதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பா.ஜ.க. மூத்த தலைவர்கள் தமிழிசை சௌந்தரராஜன், எச்.ராஜா மற்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஆகியோரின் வீடுகளுக்கு முன்னால் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதற்குக் கண்டனம் தெரிவித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், சென்னையையடுத்த அக்கரையில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கைதுசெய்யப்பட்டுள்ளார். டாஸ்மாக் அலுவலகப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக அண்ணாமலை, களத்தூரிலுள்ள வீட்டிலிருந்து எழும்பூர் நோக்கிச் சென்றநிலையில், பாதி வழியில் சென்னையையடுத்த அக்கரையில் அண்ணாமலையை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதற்கிடையே, சென்னையில் டாஸ்மாக் அலுவலகத்தில் பா.ஜ.கவினர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் நடத்திய தமிழக பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட பா.ஜ.கவினரை பொலிஸார் வலுக்கட்டாயமாக கைதுசெய்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், பா.ஜ.க. மூத்த தலைவர் எச்.ராஜா, தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி, பா.ஜ.க. மாநில செயலாளர்கள் வினாத் செல்வம், அஸ்வத்தாமன் உள்ளிட்டோரும் கைதுசெய்யப்பட்டனர்.

# பணிப்பகிஷ்கரிப்பில் குதித்த நுவரெலியா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள்



(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பணிப்புரியும் அரச தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை (17) காலை 10 மணிமுதல் பகல் ஒருமணிவரை மூன்று மணித்தியாலங்கள் சேவைகளை இடைநிறுத்தி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நாடளாவிய ரீதியில் தாதியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் நுவரெலியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் பணிப்புரியும் தாதியர்கள் வைத்தியசாலை நுழைவாயிலுக்கருகே நின்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கெதிரான வாசகங்கள் பொறித்த பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதில் 2025 வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட கூடுதல் நேர கொடுப்பனவுகளைக் குறைத்தல் மற்றும் பதவியுயர்வு முறையைக் குறைத்தல் ஆகிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுமென தாதிய உத்தியோகத்தர்கள் எச்சரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பொகவந்தலாவையில் வாள்வெட்டுத் தாக்குதல்

### சந்தேகநபர்கள் தலைமறைவு



(பொகவந்தலாவை நிருபர்)

பொகவந்தலாவை நகரில் நேற்று முன்தினம் (16) மாலை நபரொருவர்மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு சாராருக்கிடையிலான தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர்மீது இருவர் வாள்வெட்டு மேற்கொள்ளும் காட்சிகள் அப்பகுதியிலுள்ள சி.சி.ரி.வி. கெமராக்களில் பாதிவாகியுள்ளன. தாக்குதலை மேற்கொண்ட இருவரும் தலைமறைவாகியுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களைக் கைதுசெய்வதற்குரிய தேடுதல் வேட்டையில் பொகவந்தலாவை பொலிஸார் இறங்கியுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்கான நபர் பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



கண்டி ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் தேசிய மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்து ஊடகவியலாளர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் தேலவைச் சந்தித்து பல ஆலோசனைகளைப் பெற்றிருந்தனர்.
(படம் :- எம்.ஏ.அமீனுல்லா)

## இலங்கை அரச ஆசிரிய சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்

(கினிகத்தேனை நிருபர்)

இலங்கை அரச ஆசிரிய சங்கத்தின் பிரதம செயலாளர் ஷெஹான் திசாநாயக்கவின் தலைமையில் கண்டியில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் சங்கத்தின் ஏழாவது வருடாந்த மாநாட்டை ஏப்ரல் 03ஆம் திகதி கண்டி நகரில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து ஆசிரியர்களையும் தமது வருடாந்த மாநாட்டுக்கு அழைப்பதாக இலங்கை அரச ஆசிரிய சங்கத்தின் உப தலைவர் ஹூஸ்னி அஸீஸ் தெரிவித்தார்.

# டெஸ்போட்டில் அரங்கேறிய பொன்னர் சங்கர் நாடகம்



(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் நானுஓயா டெஸ்போட்டில் தமிழர் வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையில் 'பொன்னர் சங்கர்' எனும் நாடகம் அண்மையில் (16) இடம்பெற்றது.

குறித்த பொன்னர் சங்கர் வரலாற்று நாடகமானது நானுஓயா, டெஸ்போட் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத் திடலில் க.குணசேகரம் மாஸ்டரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இரு சகோதரர்களின் வரலாற்றுக் கதையை பொன்னர் சங்கர் நாடகம் எடுத்துக்கூறுகிறது. ஒவ்வொரு வருடமும் நானுஓயா டெஸ்போட்டில் குறித்த பொன்னர் சங்கர் வரலாற்றுக் கதை நாடகமாக நடத்தப்பட்டு வருகின்றது. இம்முறை 103ஆவது தடவையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பெரியகாண்டியம்மனாக க.ராஜேந்திரன், பொன்னராக எஸ்.ஆனந்தராஜ், சங்கராக வி.செல்வசந்திரன், தனுஸ்கரன், மகாமுனியாக எம்.மோகன்ராஜ், தங்காவாக பாலகிருஸ்ணன், வீரபோகுவாக எஸ்.நகுலேந்திரன், அத்தாப்பிள்ளையாக பி.குமாரவேல், காளிதேவியாக ஆர்.சாந்தகுமார், தட்டான் ஆசாரியாக தங்கவேல் (பாரிஸ்), மாயவராக ஈஸ்வரன் விஜியா, (தொண்டான்), அன்னத்தேவியாக தனுஸ்கரன், தாதிமார்களாக ஆ.கிபிசான் ஆகியோர் கலந்துகொண்டு தங்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு கதாபாத்திரங்களிலும் சிறப்பாக நடித்துள்ளனர்.

நாடகத்தைப் பார்வையிட பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# லங்கா ஐ.ஓ.சியால் நுவரெலியா சீதைஅம்மன் ஆலயத்துக்கு மின்பிறப்பாக்கி வழங்கிவைப்பு




(ஆர்.எப்.எம்.சுஹெல்)




வரலாற்றுச் சிறப்புமிக்க சீதாஎலிய சீதையம்மன் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைய ரூ.50 இலட்சம் பெறுமதியான புதிய மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தினர் நேற்று முன்தினம் (16) ஆலய நிர்வாக சபையினரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலய நிர்வாகப் பிரிவு உயரதிகாரி சச்சின் குமார் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமையாளர் ஜமிந்த ஜே.பெரேரா ஆகியோர் கலந்துகொண்டு இம்மின்பிறப்பாக்கி இயந்திரத்தை ஆலயத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், ஆலய ஆயுள் காப்பாளர் ஆதிமூலம் ஆகியோரிடம் சீதையம்மன் ஆலய வளாகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர்.

இதன்போது சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் ஆலய நிர்வாக சபையினர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# வெற்றிலைக்கேணி கடலில் அதிகாலை பரபரப்பு; மூன்றாவது நாளாக தொடரும் மோதல்!

## மருதங்கேணி பொலிஸில் முறைப்பாடு

(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியிலுள்ள கரைவலை வாடியால் மீனவர்களிடையே மூன்றாவது நாளாகவும் நேற்று (17) முறுகல்நிலை தொடர்ந்தது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி 22 கயிறுகளுக்கு மேல் கரைவலைத் தொழில் புரிவது சட்ட மீறலாக உள்ளபோதும் வெற்றிலைக்கேணி பகுதியிலுள்ள கரைவலை தொழிலாளியொருவர் நாளாந்தம் இரண்டு படகுகளில் 150க்கும் மேற்பட்ட கயிறுகளைப் பயன்படுத்தி கரைவலை தொழில் புரிந்துவருகின்றார்.

இதனால் ஏனைய மீனவர்களின் வலைகள், படகு, இயந்திரங்கள் பாதிக்கப்படுவதுடன், அவர்கள் தொழில் செய்யமுடியாத நிலையும் தொடர்ந்து உருவாகி வருகின்றது.



வெற்றிலைக்கேணியிலிருந்து 150க்கும் மேற்பட்ட கயிறுகளைப் பாவித்து குறித்த கரைவலை முதலாளி கேவில் கடற்பரப்பு வரை சென்று வருவதால் ஏனைய மீனவர்கள் தொழில் புரிவதற்கு மாலை நேரம் வரை காத்திருக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

குறித்த கரைவலை முதலாளியின் செயற்பாட்டால் அவரது கரைவலையில் சிக்குண்ட சிறு தொழிலாளியொருவரின் படகு, இயந்திரம் சேதமடைந்துள்ளன.

ஏனைய பகுதிகளில் சட்டவிரோதமாக குறித்த கரைவலை முதலாளி தொழில் புரிந்துவந்தமையால் அப்பகுதி மக்களால் அகற்றப்பட்டதன் பின்னரே வெற்றிலைக்கேணி விநாயகர்புரம் பகுதியில் தற்பொழுது தொழில் புரிந்து வருகின்றார்.

அதிகாலை 06.00 மணிக்குப் பிறகே கரைவலை தொழில் புரிவதற்கு சட்டம் உள்ளபோதும் இவர்கள் சட்டத்துக்கு முரணாக நேர காலத்தை மீறி ஏனைய மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் பாதிப்படைந்த மீனவர்கள் குறித்த கரைவலை முதலாளியுடன் மூன்றாவது நாளாகவும் முறுகலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக கடற்றொழில் சமாசத்துக்கும் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் நடவடிக்கை எடுக்கத் தவறுவதால் முறுகல் நிலை வன்முறையாக மாறும் வாய்ப்புள்ளதால் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் மூன்றாவது நாளாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# யாழில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது ஐக்கிய மக்கள் சக்தி




யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நேற்று (17) கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ். மாவட்டத்தின் 17 சபைகளிலும் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியானது யாழ். தேர்தல் திணைக்கள அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

இக்கட்டுப்பணத்தை கட்சியின் பிரதிச் செயலாளரும் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளருமான உமாசந்திரா பிரகாஷ் நேற்றுக் காலை செலுத்தியுள்ளார்.

இதன்போது உமாசந்திரா பிரகாஷ் கருத்துத் தெரிவிக்கையில்,

''யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

எமது கட்சித் தலைவர் மீது எமது மக்கள் கொண்ட நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கூட இங்குள்ள மக்கள் அமோக ஆதரவு கொடுத்திருந்தார்கள்.

இந்த முறை கணிசமான ஆதரவைப் பெறக்கூடிய நம்பிக்கையோடு இளம் வேட்பாளர்களை நிறுத்தி இத்தேர்தலில் போட்டியிடுகிறோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளடங்கலாக இலங்கை முழுவதுமுள்ள சகல சபைகளிலும் நாங்கள் போட்டியிடுகிறோம். மக்களின் ஆதரவுடன் வெற்றிகளையும் பெற்றுக்கொள்வோம்'' - என்றார்.

## பளை மத்திய பஸ் நிலையத்துக்குள் அசம்பாவிதம்: பயணிகள் அசௌகரியம்!



(யாழ். நிருபர்)

கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கிளிநொச்சி - பளை மத்திய பஸ் நிலையத்துக்குள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதாக பயணிகள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

வேலைக்குச் செல்வோர் தங்களது பயண வாகனங்களை குறித்த பஸ் தரிப்பிடத்துக்குள் நிறுத்திச்செல்வதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பாடசாலை முடிவடையும் நேரத்தில் சிலர் பளை பஸ் தரிப்பிடத்தில் இருந்துகொண்டு மாணவர்கள் மற்றும் பயணிகளிடம் அநாவசியமான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்கள் உட்படப் பயணிகள் பஸ் நிலையத்தை விட்டு வெளியில் வந்து வெயிலில் நிற்பதோடு, விபத்துகளும் இடம்பெற வாய்ப்பிருப்பதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைப்பு






(சாவகச்சேரி நிருபர்)

மாலைதீவு ரோட்டரி மாவட்டம் மற்றும் இந்திய ரோட்டரி மாவட்டம் ஆகியன இணைந்து அண்மையில் தேவைப்பாடுடைய மாணவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைத்துள்ளன.

யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும், இந்தியாவிலிருந்து வருகை தந்த முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநர்கள், யாழ்ப்பாணம், நல்லூர், யாழ்ப்பாணம் பெனிசுலா மற்றும் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கே துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரமாண்ட முறையில் ரி20 லீக் தொடரை நடத்தத் தயாராகும் சவூதி அரேபியா



கிரிக்கெட் உலகில் ரி20 லீக் போட்டிகள் பரவலாக எல்லா நாடுகளிலும் நடைபெற்று வரும் நிலையில், தற்போது பிரமாண்டமான முறையில் ரி20 லீக் தொடரை நடத்த சவூதி அரேபியா திட்டமிட்டுள்ளது. இதற்காக அந்த நாடு 500 மில்லியன் டொலர்களை முதலீடு செய்யத் தயாராகவுள்ளது.

உதைபந்து, பார்முலா 1 கார் பந்தயத்தில் சவூதி அரேபியா ஏற்கனவே முதலீடு செய்துள்ள நிலையில், தற்போது பிரபலமாக இருக்கும் கிரிக்கெட் லீக் போட்டியையும் நடத்த முடிவுசெய்துள்ளது. உலகளாவிய இந்த கிரிக்கெட் லீக் போட்டியில் 8 அணிகள் பங்கேற்கின்றன. டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் போன்று இதை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

சவூதி அரேபியாவிலுள்ள எஸ்.ஆர்.ஜே. நிறுவனம் இது தொடர்பாக ஐ.சி.சி. யிடம் தொடர்ந்து பேசி வருகிறது. அவுஸ்திரேலியாவின் தொழில் முறை லீக்குகளின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி டேனி டவுன்செனட் தலைமையிலான குழு இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஐ.பி.எல்., பிக்பாஷ் தொடர்களுக்கு இடையூறில்லாத நேரத்தில் இந்தச் சர்வதேச லீக் போட்டியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# ஐ.பி.எல். முதல் ஆட்டத்தில் ஆட பாண்டியாவுக்கு தடை



2025 ஐ.பி.எல். தொடரின் முதல் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஹர்திக் பாண்டியா விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் மும்பை அணியை சூர்யகுமார் யாதவ் அல்லது ரோஹிட் சர்மா வழிநடத்த வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரின் குரூப் ஸ்டேஜின் கடைசிப் போட்டியில் மும்பை அணி லக்னோ அணியை எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் மும்பை அணி மெதுவாக ஓவர்களை வீசியதற்காக, ஹர்திக் பாண்டியாவுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடைவிதித்ததுடன், அவருக்கு ரூ.30 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

ஐ.பி.எல். நடத்தை விதிகளின்படி, தொடர்ந்து மூன்று போட்டிகளில் மொதுவாகப் பந்துவீசியதால் ஹர்திக் பாண்டியாவுக்கு ஒரு போட்டியில் ஆட தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடையின் காரணமாகவே தற்போது சென்னை அணிக்கெதிரான முதல் போட்டியில் ஹர்திக் பாண்டியா விளையாட முடியாத சூழல் உருவாகியுள்ளது. ஹர்திக் இல்லாததால் முதல் போட்டியில் மும்பை அணியின் தலைவராக யார் செயற்படுவார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

# நெஸ்டமோல்ட் அனுசரணையில் நுவரெலியாவில் நடைபெற்ற நகர்வல ஓட்டம்




**பெண் வெற்றியாளர்கள்**
- 01. ரசாரா விஜெசூரிய
- 02. வத்சலா மதுஷானி ஹேரத்
- 03. சாமினி சமுத்திரிக்கா ஹேரத்

**ஆண் வெற்றியாளர்கள்**
- 01. முத்துசாமி சிவராஜன்
- 02. சமந்த புஷ்பகுமார
- 03. தமித் ஹேமந்த குமார




நெல்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் நுவரெலியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 49ஆவது தேசிய விளையாட்டு விழாவின் அங்கமான ஆடவருக்கான 10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட நகர்வல ஓட்டத்தில் மத்திய மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய முத்துசாமி சிவராஜன் பந்தைய தூரத்தை 34.21 நிமிடங்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார்.

இதே பிரிவில் மகளிருக்கான போட்டியில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய மெத்மி விஜேசூரிய பந்தைய தூரத்தை 38.40 நிமிடங்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார்.

இதேவேளை, ஆடவர் மற்றும் மகளிர் ஆகிய இரு பிரிவுகளிலும் அணி ரீதியான சம்பியனாக மத்திய மாகாணம் தெரிவானது.

# சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் சம்பியன் பட்டம் வென்ற இந்தியா




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் இறுதிப்போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

6 அணிகள் பங்கேற்ற குறித்த தொடரின் இறுதிப்போட்டியில் ராய்பூரில் நேற்று முன்தினம் இந்தியா மாஸ்டர்ஸ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் மாஸ்டர்ஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 148 ஓட்டங்கள் சேர்த்தது. சிம்மோன்ஸ் 57 (41) ஓட்டங்களும், டிவைன் ஸ்மித் 45 (35) ஓட்டங்களும் விளாசினர்.

பின்னர் களமிறங்கிய இந்தியா மாஸ்டர்ஸ் 17.1 ஓவரில் 149 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அம்பதி ராயுடு 50 பந்துகளில் 74 ஓட்டங்களும் சச்சின் டெண்டுல்கர் 18 பந்துகளில் 25 ஓட்டங்களும் விளாசினர்.

இதன்மூலம் 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற இந்தியா மாஸ்டர்ஸ், முதல் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இதில் குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை மாஸ்டர்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்தில் மே.இ. தீவுகள் அணியிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

1877ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்ற பின்னர் இன்னும் இரண்டு வருடங்களில் 150 வருட பூர்த்தியை முன்னிட்டு இரு அணிகளுக்குமிடையில் விஷேட பகலிரவு டெஸ்ட் போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி மெல்பர்ன் மைதானத்தில் 2027 மார்ச் மாதம் 11 - 15 வரையிலான காலப்பகுதியில் நடைபெறவுள்ளது. குறித்த போட்டி ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்குள் அடங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★

இந்தாண்டு ஐ.பி.எல். தொடரில் ரிலையன்ஸ் ஜியோஸ்டார் நிறுவனம் டிவி மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் வாயிலாக ரூ.6,000 கோடி வருமானம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகள் மூலமாக ரூ.3,900 கோடி வருமானம் பெற்ற நிலையில், நடப்பாண்டில் ஐ.பி.எல். தொடருக்கு முன்பைவிட அதிக வரவேற்பு காணப்படுவதால் விளம்பர வருமனம் 58 சதவீதம் அளவுக்கு அதிகரிக்குமென்பது மதிப்பீடாக உள்ளது.

★★★★★★★★★★★★★

2025 ஐ.பி.எல். சீசனில் எம்.எஸ்.டோனி தனது துடுப்பு மட்டையின் எடையை சுமார் 10 முதல் 20 கிராம் வரை அவர் குறைப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்கு அண்மையில் 1230 கிராம் எடையுள்ள 4 துடுப்பு மட்டைகள் கொடுக்கப்பட்டன. கடந்த ஐ.பி.எல். சீசன் வரை எம்.எஸ்.டோனி 1250 முதல் 1300 கிராம் வரை எடையுள்ள தடுப்பு மட்டையைப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளத்தில் 17 மில்லியன் பின்தொடர்பவர்களைப் பெற்று, இந்த இலக்கையடைந்த முதல் ஐ.பி.எல். என்ற சாதனையைப் படைத்துள்ளது. அடுத்ததாக, ஆர்.சி.பி. அணி 16.3 மில்லியன் பின்தொடர்பவர்களோடு 2ஆவது இடத்திலும் மும்பை இந்தியன்ஸ் 15.4 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7